

மாத்வ மித்திரன்.

THE MADWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

Vol 8.	யுவ ஸம்வத்ஸரம்	No. 6.
புஸ்தகம் 8.	மார்கசீர்ஷ மாஸம், (10—12—35 மங்களவாரம்.)	நெ. 6.

நெ.	பொருளடக்கம்.	பக்கம்.
1.	ஸ்ரீமகாபாரத தாத்பரிய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்)	153
2.	ஆசாரமாலை.	160
3.	அப்பைய தீக்ஷிதரின் அதிக்ஷேபணைகளுக்குக் கண்டனம்	164
4.	விதவாவிவாக கண்டனம்	168
5.	ஸ்ரீமத்வவிஜயம் (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்)	173
	...கோணத்தின் மகத்வம்.	177
	...திரட்டு.	183
	...னங்கள்	184

...ம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

N35.8.6
208734

மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற் கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

துவைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4: தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்துகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

ஸ்ரீலக்ஷ்மீநாரஸிம்ஹாய நம:

மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत्, तत्वतःभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்

இருபத்தி இரண்டாவது அத்தியாயம்.

(ஸ்ரீமத வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு).

(முன் 128ம் பக்கம் தொடர்ச்சி).

துரியோதனன் ஒரு முகூர்த்த காலம் ஸமயுத்தம் செய்து மற்ற அநேக கந்தர்வர்கள் சேர்ந்து மாயாவித்தையால் அவனுடைய ரதத்தை அழித்துவிடவும், துரியோதனன் தரையின்மீது நின்றான். அப்பொழுது யுத்தத்தில் சித்ரஸேனன் அவனைப் பிடித்தான். துரியோதனன் மகாபலிஷ்டனாய் இருந்தபோதிலும், இந்திர பகவானின் வரத்தாலும் விஷ்ணுவின் ஆக்ஞையாலும், சித்திரஸேனனின் பலம் விருத்தியடையவும் சித்ரஸேனனால் பிடிக்கப்பட்டான். அப்பொழுது இந்திரபகவானால் கொடுக்கப்பட்டதாயுள்ள மின்னல்களை தேவதைகளாகக்கொண்ட கயிறுகளால் துரியோதனன் இறுகக் கட்டப்பட்டான். அப்படியே அவனுடைய தம்பிமார்களும் சகுனியும் துரியோதனாதிகளின் பத்னிமார்களும் எல்லோருமே இந்திர தூதர்களான கந்தர்வர்களால் கட்டப்பட்டவர்களாய் ஆகாயத்தில் உயரக்கொண்டு போகப்பட்டார்கள். இவர்களை தூக்கிக்கொண்டு கந்தர்வர்கள்

7314

ஆகாயத்தில் […]டுப்போகவும் துரியோதனனுடைய மந்திரிகள் […]வர்களின் சமீபம் வந்து உங்கள் குலம் இந்திரனின் […]களால் பராஜயம் அடைந்துவிட்டது. பாரியைகளோடு கூடியவனும் தம்பிமார்களோடு கூடியவனுமான துரியோதனன் கந்தர்வர்களால் பிடிக்கப்பட்டுவிட்டான்; ஹே பரமவம்சத்து உத்தமர்களே! தம்பிமார்களான துரியோதனனை இந்த பந்தத்தினின்றும் விடுதலை செய்யுங்கள் என்று பாண்டவர்களைப் பார்த்து கூக்குரல் போட்டனர். இவ்வாறு துரியோதனனின் மந்திரிமார்களால் பேசப்பட்ட பீமசேனர் தன் அண்ணனைப் பார்த்து இவ்வாறு பேசினார். "ஹே தர்மபுத்திரா! இந்த யுத்தம் எந்த காரணத்தைக்கொண்டு என்பதை நான் அறிவேன். துரியோதனன் தன்னுடைய ஐசுவரியத்தை எங்களுக்குக் காட்டி எங்கள் தேஜஸ்ஸை பங்கம் செய்யவேண்டுமென்று கோஷயாத்திரை என்னும் சாக்கிட்டு இங்கு வந்தான். இந்த துரியோதனாதிகளின் ஆலோசனையை இந்திரபகவான் தெரிந்துகொண்டு துரியோதனாதிகளை கட்டச்செய்திருக்கிறார். ஆகவே இந்த விஷயத்தில்நாங்கள் செய்யக்கூடியதொன்றுமில்லை என்றுசொல்லி, பீமசேனர் தனக்கு திவ்யக்ஞானமிருப்பதாய் அறிவித்து, பீமசேனர், இவ்வளவு சமாசாரத்தையும் சொல்லிவிட்டு பேசாமல் நின்றார். ஒரே நாளில் செய்யக்கூடியதான யக்ஞம் செய்ய தீக்ஷையடைந்திருந்த தர்மபுத்திரரால் ஆக்ஞாபிக்கப்பட்டவர்களான பீமசேனரும் அர்ஜுனனும் நகுல சகாதேவர்களுடன் சேர்ந்து யுத்தத்தில் கந்தர்வர்களையும் சித்திரஸேனனையும் ஜயித்து சீக்கிரமே துரியோதனாதிகளை விடுவித்தனர். அந்த சித்ரஸேனன் இந்திரபகவான் சொன்ன எல்லாவிருத்தாந்தங்களையும் துரியோதனனுடைய துராலோசனையையும் பீமார்ஜுனர்களிடம் சொன்னான். அதைக் கேட்டுவிட்டு துரியோதனன் மிகவும் வெட்கப்பட்டான். பிறகு யக்ஞத்தை பூர்த்திசெய்துகொண்டு வந்த தர்மபுத்திரரிடம் சித்ரஸேனாதிகள் எல்லோரும் வந்துசேர்ந்தனர். தர்மபுத்திரர் சித்ரஸேனனை பூஜித்து அவரை சீக்கிரமே அனுப்பிவைத்துவிட்டு, ஹே காந்தாரி புத்திரனை துரியோதனா! இனி இப்பேர்ப்பட்டதாயுள்ள உன்னால் மௌட்யதான காரியத்தைச் செய்யாதே

என்று சொன்னார். இவ்வாறு துரியோதனன் பாண்டவர்களால் தப்பித்துக்கொள்ளப்பட்டவனாய் பாரியை பிருத்யர்களுடன்கூடி அந்த த்வைதவனத்தைவிட்டு கொஞ்சதூரம் திரும்பிவந்து, ஓடிப்போயிருந்த ஸைனியங்களை சேகரித்துக் கொள்வதற்காக அவ்விடம் உட்கார்ந்திருந்து மிகுந்தவெட்கமடைந்து கர்ணனைக்கண்டான். ராஜனான துரியோதனா! தெய்வ ஸங்கல்பத்தால் ஜயித்துவிட்டாய் என்று கர்ணன் துரியோதனனைச் சொல்லவும், துரியோதனன் வெட்கப்பட்டு நான் ஜயிக்கவில்லை என்று சொல்லி, நடந்த சமாசாரத்தை எல்லாம் கர்ணனிடம் சொல்லி, அவமானம் ஏற்பட்டதில் மிகுந்த துக்கமுள்ளவனாய், அன்று உபவாஸம் செய்தான். கர்ணன் துச்சாசனன் சொக்கட்டானுட்டத்தை அறிந்த சகுனி மற்ற தம்பிமார்கள் இவர்களால் துரியோதனன் போஜனம் செய்ய பிரார்த்திக்கப்பட்டும் அதற்கு எழுந்திருக்கவில்லை. பிறகு அன்று இரவு வரவும், அஸுரர்களின் கக்ஷியார்கள் துக்கத்தை அடையவும், அஸுரர்கள் யோசனைசெய்து ஓர் வேலைசெய்யும் பிசாசை உண்டாக்கினார்கள். சுக்ராசாரியாரால் உண்டாக்கப்பட்ட அந்த கிருத்யா பிசாசம் துரியோதனனை மந்திரிமார்கள் படுத்திருக்கும்பொழுது, அவனை தூக்கிக்கொண்டு சீக்கிரமே பாதாளலோகம் சென்றது. பிறகு அங்கே கலி முதலான தைத்யர்கள் துரியோதனனுக்கு இவ்வாறு போதித்தனர். நான் செய்த தபத்தால் சந்தோஷமடைந்த பரமசிவனால் நீ சிருஷ்டிக்கப்பட்டாய். நீ லோக விலக்ஷணமான புருஷன். வீரன். வஜ்ஜிராயுதம் போல் அழுத்தமுள்ள சரீரமுள்ளவன். எப்பொழுதும் கொல்லமுடியாதவன். எங்கள் கக்ஷியாருக்கு நீ சகாயமாய் இருப்பவன். பாண்டவர்கள் தேவர்களுக்கு சகாயமாய் இருப்பவர்கள். இப்பொழுது எல்லா தேவர்களின் வரத்தால் கந்தர்வர்களால் ஜயிக்கப்பட்டிருக்கிறாய். பாண்டவர்களை நீ ஜயிக்கும்படியாய் உன்னை நாம் செய்கிறோம். கிருஷ்ணனால் கொல்லப்பட்ட நரகாஸுரன் இப்பொழுது கர்ணனை பிரவேசித்திருக்கிறான். அவன் கிருஷ்ணனையும் அர்ஜுனனையும் நாசம் செய்யப்போகிறான். இதில் சந்தேகமில்லை. நாங்கள் உன் ஜயத்திற்காக பீஷ்மத்ரோணாதிகளை பிரவேசம் செய்யப்போகிறோம். எங்கள் தபஸ

ஸால் உன்னையும் கர்ணன் முதலான எல்லோரையும் விருத்திசெய்கிறோம். ஆகையால் துரியோதன ராஜனே; பயமற்று உன் நாட்டுக்குப்போய் ராஜ்ய பரிபாலனம் செய். நாம் இப்பொழுது சொன்ன வார்த்தைகளை ஒருவருக்கும் சொல்லாதே. இது ரகஸ்யமாயிருந்தால் இதுவே உனக்கு ஐசுவரியத்தை விருத்தி செய்யும். இவ்வாறு அஸுரர்கள் சொல்ல அந்த கிருத்யா பிசாசு மூலமாய் அவன் முன்னிருந்த இடத்தில் துரியோதனனை விட்டுவிட்டார்கள். அப்பொழுது துரியோதனன் தன் கீழ்பாதி சரீரம் பார்வதியால் நிர்மாணம் செய்யப்பட்டதென்றும் மேற்பாதி சரீரம் பரமசிவனால் நிர்மாணம் செய்யப்பட்டதென்றும் தனக்கு ஒருவராலும் கொல்லப்படாமலிருக்கும் தன்மை இருக்கிறதென்றும் தெரிந்துகொண்டு ராஜ்யபாரம் செய்யும் விஷயத்தில் புத்தியை செலுத்தினான். தான் அன்றிரவு அனுபவித்தசங்கதியை துரியோதனன் தன் சொந்த ஜனங்கள் யாரிடமும் சொல்லவில்லை. அன்றிரவு முடிந்து விடிந்ததும் கர்ணன் வந்து துரியோதனனிடம் இவ்வாறு பேசினான். சத்ருவை ஸந்தாபப்படுத்துகிறவனான துரியோதனா! உன் வேலை ஆட்களாகிய பாண்டவர்களால் நீ விடுவித்துக்கொண்டது உலகில் உனக்கு விசேஷமான மரியாதை செய்ய காரணமே ஆகும், உன் கிங்கரர்களான பாண்டவர்களே கந்தர்வர்களை ஜயித்திருக்கையில் நீ கந்தர்வர்களை ஜயிப்பவன் என்று சொல்லவும் வேண்டுமோ! ஹே ராஜ சிரேஷ்டனே! இந்த காரணத்தால் நீ உடனே ஹஸ்தினாபுரம் போக எழுந்திரு. தைரியம் செய்துகொள். அர்ஜுனனுடைய பலத்தின் விஷயமாய் உனக்கிருந்து வரும் பயம் நீங்கட்டும். நான் செய்யும் பிரதிக்ஞையைக் கேள். நான் அர்ஜுனனைக் கொல்லும் வரையிலும் என் காலை நானே என் கையைக்கொண்டு அலம்பிக்கொள்கிறேன். இதரர்களால் என் காலை அலம்பிக்கொள்வதில்லை என்றிவ்வாறு கர்ணன் சொல்ல, அதைக்கேட்ட துரியோதனன் எல்லா தம்பிமார்களாலும் சகுனியாலும் கெஞ்சிகேட்கப்பட்டவனாய் ரதத்தில் ஏறிக்கொண்டு சீக்கிரமே ஹஸ்தினாபுரத்திற்கு புறப்பட்டான்.

கர்ணனின் கவசம் போனது.

சூரிய புத்திரனான கர்ணனுக்கு அவன் சரீரத்துடனே பிறந்த கவசம் கர்ணகுண்டலங்கள் இருப்பதால் அவன் ஒருவராலும் கொல்லப்படாதவனாய் அவத்யனாய் இருக்கிறானென்று அறிந்து இந்திரபகவான், அவனுடைய சரீரத்தோடே உண்டாயிருப்பதன்நிமித்தம் அதி உத்தமமாயுள்ள அந்த கவசம் கர்ணகுண்டலங்களைக்கொண்டு போய்விடவேண்டுமென்று விரும்பினார். மகேந்திரனின் அபிப்பிராயத்தைத்தெரிந்துகொண்ட சூரியன் ஸ்வப்பனத்தில் கர்ணனுக்குத் தென்பட்டான். இந்திரன் யாசிப்பவனாய் வருவான் என்றும் அவனுக்கு உன் கர்ணகுண்டலங்களையும் கவசத்தையும் கொடுக்காதே என்றும் சூரியன் கர்ணனைத்தடுத்தான். அதற்கு கர்ணன் நான் எவ்வகையிலும் அவைகளைக்கொடுத்தே தீருவேன் என்று சொல்லவும் சூரியன் இந்திரனிடமிருந்து உத்தமமான ஆயுதத்தை அதற்கு பதிலாய் எடுத்துக்கொள் என்று சொன்னான். பிறகு பிராம்மண ரூபத்துடன் இந்திரன் வந்திருப்பதாய் அறிந்து கர்ணன் மகேந்திரனிடமிருந்து அமோகமான சக்தி ஆயுதத்தைப்பெற்றுக்கொண்டு தன்னுடைய சகஜமான கர்ணகுண்டலங்களை தன் சரீரத்தினின்றும் அறுத்து எடுத்து இந்திரபகவானிடம் கொடுத்தான். அர்ஜுனனல்லாமல் வேறு ஒரு சூரனை இந்த சக்தி ஆயுதத்தால் நீ கொல்லப்போகிறாய் என்று மனதில் சொல்லிக்கொண்டு அந்த கவச கர்ணகுண்டலங்களை எடுத்துக்கொண்டு இந்திரலோகம் போய்சேர்ந்தார்.

யக்ஷ பிரசினம்.

பாண்டவர்கள் துரியோதனனை கந்தர்வர்களிடமிருந்து விடுவித்து மிகவும் சந்தோஷமுள்ளவர்களாய் வனத்தில் வாசம் செய்யும்பொழுது ஓர் பிராம்மணருக்குச்சொந்தமான அரணிக்கட்டையுடனுள்ள ஹோமபாத்திரமொன்று மானால் கொண்டுபோகப்பட்டதாய்க்கேட்டு அதை பின்பற்றிப்போய் துரத்தினார்கள். அந்த மான் வனத்தில் மறைந்துபோய் விடவும், பாண்டவர்கள் தாகமெடுத்து ஜலத்தை அருந்த ஒருவர் பின் ஒருவராய் ஓர் குளத்திற்குச் சென்றனர். ஜலத்தைக் குடிக்கப்போன பாண்டவர்களில் தர்மபுத்திரனைத்தவிர மற்ற நால்வர்களும் அந்த குளத்தில் யக்ஷ ரூபியாயிருந்த யம பகவானால் தடுக்கப்பட்டும் பலாத்காரமாய் ஜலத்தைப் பானம்செய்து யம பகவானின் மாயையால்

அந்த குளத்தின் கரையில் படுக்கவைக்கப்பட்டனர். பீமசேனர் முதலான உத்தம ஞானிகள் அந்த யக்ஷன் செய்த பிரசினங்களுக்கு சமாதானம் சொல்ல சக்தர்களாயினும் தம் க்ஷத்திரிய தர்மத்தைக் காப்பாற்றிக்கொள்ள ஜலபானம் செய்யும்பொருட்டு பிரசினங்களுக்கு பதில் சொல்லி சமாதானம் செய்துகொள்ளவில்லை. ஆகவே அந்த யக்ஷ பிரசினங்களுக்கு அவர்கள் பதில் சொல்லவில்லை. வித்தையைக்கொண்டு ஜீவனம் செய்வது பிராம்மணர்களுக்கு தர்மமாகாது. அப்படியிருக்க வித்தையைக்கொண்டு பிழைப்பது க்ஷத்திரியர்களுக்கு தர்மமல்லவென்று சொல்லவும் வேண்டுமோ? இந்த காரணத்தால் தான் சத்ருக்களை சம்ஹரிப்பவர்களான பீமார்ஜுனர்களும் நகுல சகதேவர்களும் பலாத்காரமாகத்தான் உதகபானம் செய்தார்கள்.

தேவர்கள் மனுஷ்யர்களில் பிறந்து மிக்க பலிஷ்டர்களாயிருந்தாலும் விஷ்ணுவல்லாமல் இதர தேவர்கள் மனுஷ்ய ஸ்வபாவத்துடன் இருக்கிறார்கள். இந்த தேவர்களுக்கு பலத்தின் காரியம் ஏற்படும்பொழுது அவர்களின் மூலரூபத்தின் குணங்கள் தாரதம்மிய கிரமப்படி அபிவியக்தமாகிறது. பீமார்ஜுனர்கள் யமபகவானைவிட மிக்க அதிகமான பலமுள்ளவர்களாயினும் அவர்கள் மனுஷ்யஸ்வபாவமுள்ளவர்களாயிருந்தகால் தேவதாசக்தியை கைக்கொண்டு சிறிதுகாலம் தூங்கியிருக்கும்படிசெய்தார். யமபகவானின் மாயையானது பீமார்ஜுனர்களை சிறிதுகாலம்தான் மறைக்க மாளும். பீமார்ஜுனர்கள் எழுந்தபின் அவர்களின் சக்தியில் நூறில் ஒருபங்கைக்கூட யமபகவான் அடையமாட்டார். இப்போது நாம் சொல்லியிருக்கும் இந்த சக்தியின் தாரதம்மியம் பாத்மபுராணத்தில் நன்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் பீமார்ஜுனர்களுக்கு சக்தியில்லை என்று அறியலாகாது. பிறகு தர்மபுத்திரர் ஜலத்தின் அருகில் வந்து சேர்ந்தார். அங்கு தன் தம்பிகள் விழுந்து கிடப்பதைப் பார்த்து மிகவும் துக்கப்பட்டவராய் ஜலத்தைக் குடிக்க விரும்பும்பொழுது அச்சமயம் கொக்கின் ரூபத்தை எடுத்திருந்த தன் தந்தையான யமபகவானால் நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் நீ ஜலத்தை குடிக்காதே என்று தடுக்கப்பட்டதும்

தர்மபுத்திரர் ஜலத்தைக் குடிக்கவில்லை. தயைகொண்டவரான தர்மபுத்திரர் தன் தம்பிமார்களை எழுப்புவதற்காக அந்த தர்மதேவதைசெய்யும் பிரசினங்களுக்கு பதில்சொல்ல ஆலோசித்தார். பிறகு யமபகவான் அந்த கொக்குரூபத்தை விட்டுவிட்டு யமரூபியாயிருந்து பிரசினங்களைச்செய்தார். தர்மபுத்திரர் அந்த பிரசினங்களுக்கு பதில் சொன்னார். பிறகு அந்த யக்ஷன் சந்தோஷமடைந்து இந்த உன் தம்பியார்களில் ஒருவன் பிழைத்து எழுந்திருக்கட்டுமென்று தர்மபுத்திரருக்கு வரனைக்கொடுத்தார். அதற்கு தர்மபுத்திரர் அப்படி ஒருவன் பிழைப்பதாயிருந்தால் நகுலன் எழுந்திருக்கட்டுமென்று வரனைக்கேட்கவும் யமபகவான் ஸந்தோஷப்பட்டு இவ்வாறு பேசினார். ஹேதர்மபுத்திரா! உனக்கு பீமசேனனிடம் அதிக சிநேகமிருக்கிறது. அவன் மிக்க பலிஷ்டன். அவன் பிழைத்தெழுந்தால் நீ ராஜ்யமடையவும் காரணமாய் ஆவான். அப்படியிருக்க நகுலன் பிழைக்க ஏன் யாசித்தாய் என்றிவ்வாறு யக்ஷன் கேட்கவும் இதை கேட்ட தர்மபுத்திரர் மாத்ரீ தேவியின் மகனைவிட்டு விட்டு மீண்டும் குந்தியின் மகனை நான் எழுப்புவது உசிதமாகாது என்று சொன்னார். தர்மபுத்திரரின் தயாளுத்தன்மையால் சந்தோஷமடைந்த யமபகவான் பாண்டவர்களுக்கு அக்ஞாத வாசத்தில் அவர்கள் இஷ்டப்படி ரூபத்தை தரிக்கும் சக்தியும் பிறகு முன்போல் தன் ஸ்வரூபத்தை அடையும் சக்தியும் யாராலும் அறிய முடியாமல் இருக்கும் சக்தியும் ஏற்படும்படி வரனை பாண்டவர்களுக்கும் திரௌபதிக்கும் கொடுத்தார். இவ்வாறு யமபகவான் தர்மபுத்திரரை தன் மகனைச் செய்துகொண்டு தன் ஸ்வரூபமாயுள்ள தர்மபுத்திரரால் மிருகாதிரூபத்துடன் விளையாடிக்கொண்டு தனக்கு கீர்த்தியையும் தர்மத்தையும் விருத்திசெய்துகொண்டார். யமதர்மன் யுதிஷ்டிர ரூபியான தமக்கு கீர்த்தியும் தர்மமும் விருத்தியாவதற்காகவே அந்த பிராம்மணரின் அரணிப்பாத்திரத்தை அபகரித்தல் முதலான காரியத்தைச் செய்துவிட்டு பிறகு அந்த அரணிப்பாத்திரம் முதலியவைகளை பிராம்மணனுக்குக் கொடுக்கும்படி அவைகளை தர்மபுத்திரரிடம் திருப்பிக்கொடுத்துவிட்டு ஸ்வர்கலோகம் பிரயாணம் செய்தார். பிறகு தர்மபுத்திரர்

பீமசேனர் அர்ஜுனன் நகுலன் சகதேவன் இவர்களுடன் சேர்ந்து பிராம்மணரிடம் அரணிப்பாத்திரத்தை கொடுத்து துரௌபதியுடன் சந்தோஷமாய் வனவாசத்தின் கடைசி நாளில் அநந்தனுயும் நாசமற்றவனுயுமுள்ள ஸ்ரீ கிருஷ்ணரையும் ஸ்ரீ வேதவியாஸரையும் விசேஷமாய் ஸ்தோத்திரம் செய்தார்கள்.

ஸ்ரீமத் ஆனந்த தீர்த்த பகவத் பாதாள் இயற்றிய
ஸ்ரீமகாபாரத தாத்பரிய நிர்ணயத்தில்
இருபத்தி இரண்டாவது அத்யாயம்
ஸம்பூர்ணம்.
ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

ஆசாரமாலை.

காயத்ரீ விஷயம்.

(முன் 100ம் பக்கம் தொடர்ச்சி.)

மேலும் காயத்ரியின் மூன்று பாதங்களும் வெவ்வேறாய் மூன்று பகவத் ரூபங்களைக் காட்டுகிறது. பிருஹதாரண்யக பாஷியத்தில் சொல்லப்படுவதாவது:— "ரிக் யஜுஸ்ஸாமஸம்ஸ்தோயோ பகவான் புருஷோத்தம:। ஸத்வித்யபதேஞேக்தோ காயத்ர்யா: ப்ரதமேனது । பூம்யந்தரிக்ஷ ஸ்வர்க்கஸ்த த்ருதீயேன ஸமீரக:"।। இதன் பொருளாவது:— த, த்ஸ, வி, து, ர்வ, ரே, ணி, யம் என்னும் எட்டு எழுத்துக்களைக்கொண்ட காயத்ரியின் முதல் பாதத்தால் சொல்லப்படுகிறவர், பூமி அந்தரிக்ஷம் த்யௌ: என்னும் மூன்று வார்த்தைகளிலுள்ள பூமி அ, ந்த, ரி, க்ஷம், தி, ஔ என்னும் எட்டு எழுத்துக்களால் சொல்லப்படுகிறவராய், பூலோகம் அந்தரிக்ஷலோகம் த்யோலோகம் இவைகளிலிருப்பவராயுள்ள அநிருத்தனென்னும் பகவத் ரூபமாகும். ப, ர்கோ, தே, வ, ஸ்ய. தீ, ம, ஹி என்னும் எட்டு எழுத்துக்களைக்கொண்ட காயத்ரியின் இரண்டாவது பாதத்தால் சொல்லப்படுகிறவர், ரிசோ, யஜும்ஷி ஸாமானி என்னும் மூன்று வார்த்தைகளிலுள்ள ரி, சோ, ய, ஜும், ஷி, ஸா, மா, னி என்னும் எட்டு எழுத்துக்களால் நிரூபிக்கப்படுகிறவராய் ரிக் வேதம் யஜுர்வேதம் ஸாமவேதம் இவைகளிலிருந்து வருபவராயுள்ள பிரத்யும்னனென்னும் பகவத்ரூபமாகும். தி, யோ, யோ, ந, ப்ர, சோ, த யாத் என்னும் எட்டு எழுத்துக்களைக்கொண்ட காயத்ரியின் மூன்றாவது

பாதத்தால் சொல்லப்படுவதால் ப்ராணோபானவ்யான: என்னும் வார்த்தைகளிலுள்ள ப்ரா, ண:, அ, பா, ன:, வி, ஆ, ன: என்னும் எட்டு எழுத்துக்களால் நிரூபிக்கப்படுகிறவராய், ப்ராணர், அபானர், வ்யானர் என்னும் வாயுபகவானின் ரூபங்களில் இருந்துவருகிறவராயுள்ள சங்கர்ஷணரென்னும் பகவத் ரூபமாகும். "சதுர்த்தபாதோ காயாத்ர்யா: ப்ரணவஸ்ஸமுதீரித:" ஓம் என்னும் ப்ரணவம் காயத்ரியின் நான்காவது பாதமாக சொல்லப்படும். அந்த ப்ரணவத்தால் சொல்லப்படுகிறவர் சூரியமண்டலத்தில் உள்ள ரமாதேவியிலிருந்து வரும் பகவத் ரூபமான வாஸுதேவராவார். ஓம் என்னும் ப்ரணவமும் அகாரம், உகாரம், மகாரம், நாதம், பிந்து, கலை, சாந்தம், அதிசாந்தம் ஆகிய இந்த எட்டு எழுத்துக்களைக்கொண்டதாய் ஆகிறது.

மேலும் தைத்திரீய பாஷியத்தில் சொல்லப்படுவதாவது:—

வர்ணோதி வாசகம் ரூபம் க்ஞேயம் வர்ணோதி நாமகம் ।
வாஸுதேவாதிகான்யேவ தானி பூர்வோத்தரார்ணயோ :।।
ஸம்ஹிதாயா ஸ்ததாஸந்தௌ ஸந்தானே சாபி கிருத்ஸனச:
யோவேதைதானி ரூபாணி ஸர்வபோக ஸமன்வித :।
ப்ராப்னோதி வைஷ்ணவம் ஸ்தானம் முக்த: ஸ்வர்காபிதம்வரம்।।

இதன் தாத்பர்யமாவது:— ஒவ்வொரு எழுத்து அதன் ஸ்வரம் அதன் மாத்திரை முதலியவைகளால் சொல்லப்படும் பகவத் ரூபத்திற்கு அந்த வர்ணம் ஸ்வரம் முதலான பெயர்கள்தான். வாசுதேவர் ப்ரத்யும்னர் சங்கர்ஷணர் அநிருத்தர் இந்த நான்கு ரூபங்கள் முதல் அக்ஷரம் அடுத்த அக்ஷரம் இதன் இடைவெளியிலுள்ள அவகாசமாகிற ஸம்ஹிதையின் ஸந்தியில் அதாவது ஸமீபம், இந்த ஸந்தியைச் சேர்ப்பதாயுள்ள ஸந்தி அக்ஷரத்தை உச்சாரம் செய்வதாகிய ஸந்தானம் என்னும் காரியம் இவைகளிலிருப்பதாய் த்யானம் செய்யவேண்டும். இவ்வாறு தெரிக பூர்வோத்தர விவக்ஷையின்படி எல்லா பகவத் ரூபங்களையும் அறிபவன் இஹலோகத்திலும் ஸமஸ்த போகானுபவங்கள் உள்ளவனுய் பின்பு முக்தனுய் ஆகி வைகுண்டத்தை அடைகிறான். இது சம்பந்தமாய் இன்னும் விரிவாய் ஐதரேய பாஷியத்தில சொல்லப்படுவதாவது:— த்வயம் த்வயம் தேவதானும் மிளிதம் ஹரி சர்வவித்। ஸம்ஹிதா நாமகம் தத்ர வர்ணமத்யஸ்ய தேவதா। தயோரேகம் தேவதயோ: பரமன்யத் ததாவரம்। அவரஸ்ய பரஸ்யாபி ஸம்யோகாத் ஸம்ஹிதா துஸா। பரோக்தா வரபரேத்யேவ வாக் ப்ராணுக்யௌ ரமாச்யுதௌ। ஸம்ஹிதைகா ததைவான்யா கேசவோ வாயுஸம்யுத:। வாயு: ஸபவமானுக்ய: தேவ

தாஸ்சாகிலா அபி। த்ருதீயா ஸம்ஹிதாப்ரோக்தா தேவதாஸ்தா ஸ ஙிங்
கரா:। சதுர்த்தீ ஸம்ஹிதாப்ரோக்தா சங்கரோ ப்ரம்மணாஸஹா।
பஞ்சமீ ஸம்ஹிதா சைவ ஸம்ஹிதா மோக்ஷதா இமா:। ப்ரதமாயாம்
த்விதீயாயாம் விஷ்ணுரேவ பரோமத:। த்ருதீயாயாம் வாயுரேவ
சதுர்த்யாம் ஸர்வ தேவதா:। விரிஞ்சஏவபஞ்சம்யாம் அவரா இதரே
தத:। த்யோதனுச்ச யதிப்ரூயான் மந்த்ரமேதமதாபிவா। ஆத்மார்
த்தே பரார்த்தேவா சிந்தயேதேவ மஞ்ஜஸா। வித்வாம்ஸோ தேவ
தாயஸ்மாத் ஸம்யக்தேன மஹத்பலம்। தேஷாமேவஹரிஸ்சைவ ஸம்
ஹிரத ரூபக: ப்ரபு:। அகமத் தேவலோகம்ஹி கர்த்தும் தேவேஷ்
வனுக்ரஹம்। இதி சிந்தயதஸ் தேஷாம் ப்ரஸாதாத்பலமஞ்ஜஸா। ஸா
தேவீ ஸம்ஹிதா நாம்னீ வாச்யோஸ்யா விஷ்ணு ரேவஹி। ப்ரஜா
பத்யாக்ய சர்வேண ப்ரோக்தான்யா ஸம்ஹிதாபிஹி। த்ராணாத் பூஜித
ஏவாஸௌவர்ண ஸந்தானகர்மணி। ஸந்தான நாமா ஸந்தான கர்த்ருத்
வாத் புருஷோத்தம:। அன்யேஷாமபி சப்தானாம் ஸம்ஹிதா விஷ்ணு
வாசிகா:। தத்வாசகா: தத்வர்ணா: ஸர்வே லௌகிக வைதிகா:। பிருதிவீ
நாமகம் ரூபம் பிருதுத்வாத் பிருதிவீ ஸ்திதம்। தேவதா பூர்வவர்ணஸ்ய
பூர்வரூபம்ததுச்யதே। தேவதோத்தர வர்ணஸ்ய க்ரீடனாச்ச த்யுநாமகம்।
திவிஸ்திதம் ஹரேரூபம் உத்தரம்ரூபமுச்யதே। வேதகத்வாச்சயனத்வாத்
ரூபம் யத் வாயுநாமகம்। விஷ்ணோஸ்தத்வர்ணயோர் மத்ய தேவ்தேதி
ப்ரகீர்த்திதம்। ஸம்ஹிதர நாமகம் தச்ச ரூபத்வய ஸஹஸ்திதே:।

இதன் தாத்பரியமாவது:—பாதிபாகம் சங்கரனும் பாதிபாகம்
நாராயணனும் சேர்ந்திருப்பதுபோல் ஸம்ஹிதை எனப்படும் தேவதை
முன் பின் எழுத்துக்கள் சேர்ந்ததாகும். முன் பின் எழுத்துக்களின்
மத்யபாகத்திற்கு தேவதை ஸம்ஹிதை எனப்படுகிறார். முன் எழுத்து
தேவதை அவரமாகவும் (அதாவது தாழ்ந்தவராகவும்) பின் எழுத்து
தேவதை அவரை விட வரமாகவும் மேலானவராகவும் இருந்து இவ்
வாறு தாழ்ந்தவரும் மேலானவரும் சேர்ந்திருப்பதால் ஸம்ஹிதை என்று
பெயர் வந்தது. வாக்காகிற ஸரஸ்வதியிலிருந்து அப்பெயர்கொண்ட
லக்ஷ்மியும், ப்ராணராகிய வாயு பகவானில் இருந்து அப்பெயர்கொண்ட
நாராயணரும், அர்த்தநாரீஸ்வரனைச் சேர்ந்து ஒன்றாயிருக்கும் லக்ஷ்மி
நாராயணரூபம் பிருஹத்ரதந்த்ர சப்தத்தால்சொல்லப்படும் ரூபமே
யாகும். இது முதல் ரூபம். ப்ராணராகிய ஹரி பவமானராகிய வாயு
பகவானுடன் சேர்ந்திருப்பது மற்றொரு ரூபம். இது இரண்டாவது
ஸம்ஹிதா ரூபம். பவமானனாகிற வாயு பகவான் எல்லா தேவர்களுடன்

சேர்ந்திருப்பது மற்றொரு ரூபம். இது மூன்றாவது ஸம்ஹிதா ரூபமா
கும். எல்லா தேவர்களும் ஸ்வர்க்கலோகமாகிய சிவனுடன் சேர்ந்திரு
பது நான்காவது ஸம்ஹிதா ரூபம். சிவன் பிரம்மாவுடன் சேர்ந்திருக்
கும் ரூபம் ஐந்தாவது ஸம்ஹிதா ரூபம், இவ்வாறு முன் எழுத்து
தேவதையான கீழானவரும் பின் எழுத்து தேவதையான மேலானவரு
மாய்சேர்ந்து அந்த சந்திப்பு ஐந்து வகையாய் ஏற்படுவதால் சம்ஹிதா
தேவதைகளும் ஐவர்களாகின்றனர். இவ்வாறு ஸம்ஹிதா தேவதை
கள் இருந்துவருவதாய் அறிபவர்களுக்கு இந்த தேவதைகள் ஸமஸ்த
ஐஹிக ஆமுஷ்மிகமகாபலன்களைத் தருகின்றனர். 1, 2, ஸம்ஹிதா
தேவதைகளில் விஷ்ணுதான் மேலானவர். மூன்றாவதில் வாயுபகவா
னும் நான்காவதில் எல்லா தேவர்களும் ஐந்தாவதில் பிரம்மாவும் மேலா
னவர். மற்றவர்கள் அவரவர்களின் ஸம்ஹிதையில் கீழானவர்கள் தான்.
இவ்வாறு இந்த மந்த்ர தேவதைகளை இதரர்களுக்காகவோ அல்லது
தனக்காகவோ த்யானம் செய்பவருக்கு தேவர்களின் ப்ரஸாதத்தால்
மகாபலம் சாசுவதமாய் ஏற்படும். ஸம்ஹிதைக்கு அபிமானி தேவதை
ஸரஸ்வதியானதால் அவளுக்கு ஸம்ஹிதை என்றே பெயர். அவளு
டைய அந்தர்கதரான விஷ்ணுதான் இந்த ஸம்ஹிதை என்ற பெயரால்
சொல்லப்படுகிறார். இதுபோலவே ப்ராஜாபதி ஸம்ஹிதா என்றாலும்
ப்ராஜாபதியாகிய ருத்திரனால் சொல்லப்பட்ட ஸம்ஹிதை என்றாகிறது.
எழுத்துக்களை சேர்த்து வைப்பதற்காக இரண்டு எழுத்துக்களின் நடு
வில் இருப்பதால் அந்த புருஷோத்தமருக்குத்தான் ஸந்தானர் என்று
பெயர். இவ்வாறு வேதாதி சப்தங்களெல்லாம் விஷ்ணுவென்னும்
நாமத்தின் அர்த்தமாகத்தான் ஆகின்றன. மேலும் வேதங்களென்ன
இதர சப்தங்களென்ன இவைகளின் ஸம்ஹிதைகளும் விஷ்ணுவைத்
தான் குறிப்பவைகளாகின்றன. வேதங்களிலுள்ள எழுத்துக்களும்
சரியே லௌகிகங்களாகிற பௌருஷேய கிரந்தங்களின் எழுத்துக்களும்
சரியே விஷ்ணுவென்னும் பெயரிலுள்ள ஷ ண இந்த இரண்டு எழுத்
துக்களின் அர்த்தத்தையேச் சொல்கின்றன. பிருதுவாய் பெரியதாய்
இருப்பதால் பிருதிவீ எனப்படும் பூமியிலிருப்பவரான வாராஹ ரூபம்
முன் எழுத்தால் சொல்லப்படுகிறவர். தேவலோகத்திலிருந்து க்rீடித்து
வருவதால் த்யு எனப்படும் வாமன ரூபமானது பிந்திய எழுத்தால்சொல்
லப்படுகிறவர். வாயுவிடம் இருந்து அறிவிப்பவராயும் ஆசிரயராயுமிருப்
பதால் வாயுவென்று அழைக்கப்படுகிறவராயுள்ள நரஸிம்ஹரூபம் இந்
ரூபங்களை சேர்த்துவைப்பதின் நிமித்தம் ஸம்ஹிதை என்று பெயர்.
கொண்டு ஸம்ஹிதையாகிய சந்திப்பில் இருந்துவருகிறார்.

(தொடரும்.)

அப்பையதீக்ஷதரின் அதிக்ஷேபணைகளுக்குகண்டனம்.

(முன் 143-ம் பக்கம் தொடர்ச்சி.)

மேலும் இவ்வாறு ப்ரயோகம் செய்வது தோஷமென்று நீங்கள் எப்படி நிச்சயம் செய்கிறீர்கள்? தற்போது நடைமுதலிலுள்ள வியாகரணத்தைப்பார்த்து தானே? உலகில் இந்த ஓர் வியாகரணம் தான் இருப்பதாய் நீங்கள் நிச்சயமாய் அறிவீர்களா? எப்படி இருக்கமுடியும் என்றும் இது ஒன்று தான் என்றும் நீங்கள் சொல்லும் பக்ஷத்தில், மகேந்திரன் முதலான மகாவியாகரணிகள் தாம் அறிந்தது போதாதென்று சாஸ்திராப்யாஸம் செய்து வருவதாய் தெரியவருகிறதே அது வீணு என்று கேள்விகேட்க வேண்டிவரும். பிரம்ம சப்தத்திற்கு அர்த்தம் சொல்லும்பொழுது ஆனந்தமயாதி காணத்தில் எமது ஆசாரியாள் "பிருஹஜாதி ஜீவ கமலாஸன சப்தாராசிஷு" என்று ஓர் வியாகரண வாக்கியத்தை பிரமாணமாக உதாஹரித்திருக்கிறார். இந்த வாக்யம் பாணினி வியாகரணத்தில் இல்லை என்று எல்லோரும் ஒப்புக்கொண்டதே. இந்த வியாகரண வாக்யத்தின் பிரமாணத்தைக்கொண்டு பிரம்மமென்னும் வார்த்தை, பிராம்மண ஜாதியிலும் ஜீவனிடத்திலும் பிரம்மாவிடத்திலும் வேதங்களிடத்திலும் உபயோகிக்கப்படுகிறதென்று தெரியவருகிறது. பாணினி வியாகரணத்தின்படியும் ஜீவனைத்தவிர மற்ற மூன்று அர்த்தங்களிலும் இந்த பிரம்மபதம் உபயோகப் படுத்தலாமென்று ஏற்படுகிறது. பாணினி வியாகரணம் குறிக்கும் சப்தங்களைவிட அதிகமாய் ஜீவ சப்தத்தையும் குறிக்க இந்த பதம் உபயோகப்படுத்துகிறது என்று காட்ட வெளி வியாகரணத்திலிருந்து எடுத்த மேற்கண்ட பிருஹஜாதி ஜீவ கமலாஸன சப்தாராசிஷு என்னும் வாக்யத்தை, எமது ஆசாரியாள் உதாஹரணம் செய்திருக்கிறாரென்பதைக்கொண்டு, அவர் உதாஹரித்த அபிரசித்த சுருதிகள் அபிரசித்த ஸம்ஹிதைகளின் வாக்யங்களை பொய் என்றும் அவரால் கல்பிக்கப்பட்டவைகளென்றும் ஒரே மூச்சில் எல்லாவற்றையும் நீங்கள் நிராகரித்துவிட்டு கெக்கலி கொட்டியதுபோல், பொய் என்றும் கல்பிதமென்றும் சொல்லிவிடுவதோ! இந்த வாக்யத்தால் ஏற்படும் நான்கு அர்த்தங்களில் மூன்று அர்த்தங்களைபாணினியே ஒப்புக்கொண்டிருப்பதாய் ஸ்பஷ்

டமாய் ஏற்பட்டிருக்கையில், ஏகதேசமான மற்றொரு அர்த்தமான ஜீவார்த்தமும் அங்கீகாரம் செய்யப்பட்டதாகவே ஏற்றுக்கொள்ள வேண்டியதாகும். எமது ஆசாரியாளின் முதல் ரூபமான ஹனுமார், நவவியாகரணத்தில் தேர்ந்தவர் என்று ஸ்ரீமத்ராமாயணத்தில் பிரஸித்தம், "மகாவ்யாகரணுபோதி மந்தமான ஸமந்தாய்| கவயந்தம்ராமகீர்த்யா ஹனுமந்தம் உபாஸ்மஹே" என்று ஸ்தோத்திரம் செய்யப்பட்டிருக்கிறது. எமதுஆசாரியாள் சாமான்யமனுஷ்யர்கள் போகமுடியாததான பதரிகாசிரமம் முதலான மகாஞானிகளின் வசதிகளுக்கு அடுத்தடுத்து போய்க்கொண்டிருந்தபடியால் நீங்கள் கேட்டிராத அநேக சாஸ்திரநூல்களைப்படித்து அதன் ஞானத்தை பெற்றிருந்தார். இந்த காரணத்தால் இத்யாதி நூல்கள் இல்லவே இல்லையென்றும் அவைகள் இவரால் கல்பிதமென்றும் சொல்வது தகாது. மேலும் இம்மாதிரி நூதனமான சப்தப்ரயோகங்களை மிகமிகக்குறைவாக ஒன்றிரண்டு இடங்களிலும், எங்கும் வழக்கத்திலுள்ள சப்தப்ரயோகங்களை மற்ற எல்லா இடங்களிலும் இவர் உபயோகித்ததைப் பார்த்தால் இம்மாதிரியான நூதனப்ரயோகம் இந்த இடத்தில் ஓர் காரணத்தை முன்னிட்டு தான் உபயோகப்பட்டிருப்பதாய் நிச்சயிக்கவேண்டியதாகும். எண்ணிறைந்த சுருதிகள் எண்ணிறைந்த ஸ்மிருதிகள், அநேக புராணுதிகள் இவைகளிலேயே உழன்றுவரும் எமது ஆசாரியாள் அந்த குறிப்பிட்ட இடத்திலுள்ள ப்ரகரணத்திற்கு பிரமாணமாயுள்ள சுருதியையோ ஸ்மிருதியையோ உள்ளது உள்ளபடிக்கே அனுகாணம் செய்து சிஷ்யர்களுக்கு இதன் உண்மையை வெளியாக்க விரும்பி அவ்வாறு ப்ரயோகம் செய்திருக்கக்கூடும். அவ்வாறு ப்ரயோகம் செய்யும் வழக்கம் இதரர்களிலும் இருந்து வருகிறது. மகா கவீசுவரனை காளிதாஸனே "த்ரியம்பகம் ஸம்யமினம் சுதர்ச" என்று ப்ரயோகம் செய்திருப்பது எல்லோரும் நன்கு அறிந்ததே. த்ர்யம்பகம் என்று ப்ரயோகம் செய்யவேண்டியதிருக்க த்ரியம்பகம் என்று வியாகரணத்திற்கு விரோதமாய் ப்ரயோகம் செய்திருப்பது த்ரியம்பகம் யஜாமஹே முதலான வைதிக ப்ரயோகத்தை அநுகாணம் செய்வதற்காகவென்று நன்கு புலப்படுகிறது. இப்படியிருக்க எமது ஆசாரியாள் உதாஹரணம் செய்

தது மட்டில் தோஷமென்று நீங்கள் ஏனோ பறைசாற்றுகிறீர்கள்? காரணம் அவர் மீதுள்ள துவேஷம் என்றே தான் சொல்ல வேண்டும்.

எமது ஆசாரியாளின் வாக்யங்களில்சரியான அன்வயம் இல்லை என்றும் அதனால் வைதிகமரியாதையை இவர் கெடுத்தவரென்றும் நீங்கள் குறை கூறியிருக்கிறீர்கள். நாம் இதற்கு பதில் சொல்வதாவது எமது ஆசாரியாளின் வாக்யங்களில் தான் சரியான அன்வயம் இருக்கிறதென்றும் இதுவே சரியானதென்றும் வைதிக மரியாதையை ஸம்ரக்ஷிக்கக் கூடியதென்றும் சொல்கிறோம். பரம வைதிகர்களென்று எண்ணமுள்ளவர்களான சப்தங்களின்நேர்மையை நிச்சயிக்கப் புறப்பட்ட மகா வியாகரணிகள் எமது ஆசாரியாள் வியவஹரித்தபடித்தான் அநேகமாய் வியவஹாரம் புரிந்திருக்கின்றனர். அசோக்த்யாதிடி அதோக்ராந்தஸ்ய விஞஸ்ஸலோபோநந்தஸ்ய முதலான வாக்யங்களில் சரியானபடி பதங்கள் வரிசியாய் அன்வயம் காணப்படுவதில்லை. மகாபாஷியாதி நூல்களை இயற்றியவர்கள் அவ்வாறுதான் வியவஹாரம்செய்யப்படவேண்டுமென்றும் அறிவித்திருக்கின்றனர். "ஸோபஸ்காராணி ஹி வாக்யானி பவந்தி" என்று வாக்யங்களில் சேர்த்துக் கொள்ளவேண்டியது உண்டு. அவ்வாறு வாக்யங்களை எழுதவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். சைலீஹ்யேஷா ரிஷீணாம் யதா ஹ்யாம்னாயஸ்ய க்ரியார்த்வாதானர்த்க்ய மதர்த்தானாம் தஸ்மா தனித்ய முச்யதே என்று இவ்வாறு ஜைமனி ஸூத்ரத்திலும் காணப்படுகிறது. அபிப்பிராயப்பட்ட அர்த்தம் இந்த ஸூத்ரத்தின் அக்ஷர ஸ்வாரஸ்யத்தைக்கொண்டும் அறியமுடியவில்லை. இது மஹரிஷிகளின் வாக்யநடை என்று தெரிய வருகிறது. எமது ஆசாரியாள் அப்பேர்ப்பட்ட மஹா வித்வான்களான மகரிஷிகளின் கோஷ்டியில் சேர்ந்தவரென்றும் அவ்வாறு கம்பீரமான நடையில் தனக்கு எழுத வருமென்பதையும் அறிவித்திருப்பதாய் எண்ணவேண்டுமேயல்லாது ஸ்வல்ப படிப்புள்ளவர்களும் எழுதக் கூடுமான இந்த பிரசித்தமான வாக்யநடையில் அவர் எழுத மாளாதவரென்றும் வைதிக மரியாதையைக் கெடுத்தவரென்றும் நிச்சயிப்பது முட்டாள்தனமேயாகும்.

இனி எமது ஆசாரியாள் சுலோகங்களின் விருத்தங்களையும் அறிந்தவரல்லவென்றும் விருத்தமாய் ப்ரயோகம் செய்து வைதிக மரியாதையும் கெடுத்திருப்பதாயும் மற்றொரு தூஷணை சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் தவறு. சுலோகங்களில் நான்கு பாதங்களிலும் விருத்தம் சரியாயிருக்கவேண்டுமென்று நியமமில்லை. "நவ கேனைக்ஷரேண ச ஏந்தாம்ஸி வியந்தி நத்வாப்யாம்" என்றிவ்வாறெல்லாம் ப்ராம்மணத்திலேயே இது தோஷமல்லவென்று ஸ்பஷ்டமாய் கூறப்பட்டிருக்கிறது. மேலும் மகாபாரதம் முதலியவைகளில் ஆயிரக்கணக்கான இடங்களில் மாறுன விருத்தங்களும் சாந்தஸ சப்தப்ரயோகங்களும் ஏராளமாய்க் காணப்படுகின்றன. வ்யாஸோச்சிஷ்டம் ஜகத் ஸர்வம் என்றும் கோஹ்யன்ய: புண்டரீகாக்ஷான் மகாபாரதகிருத்பவேத் என்றும் பல பிராமணங்களைக்கொண்டு ஸர்வமும் அறிந்த மகாஞானி சேகரர் என்று ஒப்பக்கொள்ளப்பட்டிருக்கும் பகவான் வேதவியாஸர் அக்ஞானத்தாலோ அல்லது மாளததாலோ அவ்வாறு ப்ரயோகம் செய்திருப்பதாய்ச்சொல்வதுதவறு. அவ்வாறு அவர் உபயோகித்ததிலிருந்து வேறு வியாகரணம் இதற்கு ஆதாரமிருப்பதாய்நிச்சயிக்க வேண்டியதாகும். மேலும் வேதவியாஸாதிகள் பாணினி முதலானவர்களின் முகத்தைப்பார்த்துக்கொண்டா வியவஹரிக்கின்றனர். பாணினி முதலானவர்கள் தான் வேதவியாஸாதிகளின் முகத்தை பார்த்துக்கொண்டிருப்பவர்கள். "உதயதிதி சியஸ்யாம் பானுமான் ஸைவ பூர்வா நஹிதாணிருதேதா திக் பாதீன விருத்தி:।" என்று சூரியன் உதிக்கும் திக்கு கிழக்கு ஆகுமேயல்லாது கிழக்கு திக்கைப்பார்த்துக்கொண்டு சூரியன் உதிக்கவேண்டுமென்று சூரியனுக்கு நிர்பந்தமில்லை. அது போலவே தான் சந்தஸ்ஸின் லக்ஷணத்தைச் சொல்பவர்கள் வேதவியாஸாதிகளின் ப்ரயோகத்தைப் பார்த்து லக்ஷணங்களை நிச்சயிக்கவேண்டுமேயல்லாது அவர்களின் இஷ்டப்படி வேதவியாஸாதிகளின் ப்ரவிருத்தி ஏற்படாது. இவர்களின் ப்ரயோகமிருந்துவிட்டதோ அது அந்த லக்ஷணத்தின் பரிசுத்தத் தன்மையைக் காட்டுவதே ஆகும். எமது ஆசாரியாரும் அந்த வேதவியாஸாதிகளின் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தவராதலால் அவர் ஸ்ரீவேதவியாஸருடைய மார்க்கத்தை பின் பற்றியவராவார்.

(தொடரும்)

விதவா விவாஹ கண்டனம்.

(முன் 140ம் பக்கம் தொடர்ச்சி.)

மேலும் உலூபி ஸர்ப்ப ஜாதியைச் சேர்ந்தவளென்றும் அவளிடம் பிறந்த பிள்ளையும் ஸர்ப்பனாயிருந்தானென்றும் ஆனால் இச்சைப்படி எந்த ரூபத்தையும் தரிக்கும் சக்தி அவர்களுக்கிருந்ததென்றும் தெரிய வருகிறது. ஆதலால் ஸர்ப்ப ஜாதியைச்சேர்ந்த விதவை விவாகம் செய்து கொள்ளலாமா, கூடாதா வென்ற பிரசினையை தீர்ப்பதற்காக நாம் எத்தனப் படவில்லை. இப்போது நாம் விசாரித்து வரும் விதவா விவாக பிரசினையானது மனுஷ்ய ஜாதியையும் அதிலும் பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன் என்ற த்விஜர்களைச் சேர்ந்ததே! க்ஷத்திரிய ஜாதியைச்சேர்ந்த அர்ஜுனனுக்கு இந்த விவாகத்தால் தோஷமுண்டா வென்பதை விசாரிப்போம். அர்ஜுனன் உலூபியை விவாகம் செய்து கொள்ளவில்லையென்று மேலே விளக்கிக்காட்டி யிருந்தாலும் கக்ஷிக்காக அவன் விவாகம் செய்துகொண்டதாகவே வைத்துக் கொள்வோம். நூறு அச்வமேத யாகம் செய்து திருலோகாதிபத்யம் பெற்ற மகேந்திரனுடைய பிள்ளையும், நரர் நாராயணர் இருவர்களில் நரருடைய அம்சம் பெற்றவனாயும், த்வாரகாநாதனாய் அவதரித்த ஸ்ரீகோபால கிருஷ்ண பரமாத்மாவிடம் சக்ய பக்தியை விசேஷமாய்ப் புரிந்து கிருஷ்ணனென்றே நாமாவை அடைந்தவனும், ஸ்ரீ பகவத் கீதையையே சாக்ஷாத்தாக உபதேசம் பெற்றவனாயுமுள்ள மகானுபாவனான அர்ச்சுனனையும் நம்மையும் சேர்த்து வைத்துப் பேசுவது மதியீனமே! நிவாதக கவசகர்கள், காலகேயர்களென்ற தேவதா சத்துருக்களை சம்ஹரித்ததும் பரமசிவனோடு யுத்தம் புரிந்து பாசுபதம் பெற்றதும் இது முதலிய அமானுஷிய கிருத்தியங்கள் அவனிடம் ஒருபுறமிருக்க ஸர்ப்ப ஜாதிப்பெண்ணைச்சேர்ந்து ஸர்ப்பத்தையே உண்டாக்கிய அவனுடைய மகிமைக்கு நாம் என்ன சொல்வது? அவன் செய்த விதவா விவாகம் மட்டிலோ அனுஷ்டிக்கத் தகுந்ததாயிருக்கிறது போலும். ஏதோ ஒரு தர்மத்தை மனதிற்கொண்டு ஒரு கௌணமான காரியத்தை இப்பேர்ப்பட்ட மகானுபாவர்கள் செய்தாலும் ஸாமானியர்களான நாங்கள் அதை அனுஷ்டிக் கூடாதென்றே ஸ்பஷ்டமாய் போதாயனர் சொல்கிறார்.

அனுஷ்டிதம் துயத்தேவை: முனிபிர்ய தனுஷ்டிதம்,

நாநுஷ்டேயம் மனுஷ்யை ததுக்த்யகர்மஸமாசரேத்

''தேவர்கள் எதை அனுஷ்டித்திருக்கிறார்களோ ரிஷிகள் எதை அனுஷ்டித்திருக்கிறார்களோ அதை மனுஷ்யர்கள் அனுஷ்டிக்கக் கூடாது. அவர்கள் எதைச்செய்யவிதித்திருக்கிறார்களோ அதைத்தான் நாம் செய்ய வேண்டும்''. ஆகையால் இந்த திருஷ்டாந்தம் பிரமாணமும் இச்சபை கருதும் விதவா விவாகத்திற்கு சாதகமில்லை என்று தானாகவே ஏற்படுகிறது.

(12) வரயித்வா து ய: கஸ்சித் ப்ரணச்யேத் புருஷோ யதா ||
ரித்கவமாம் ஸ்திரீனதீத்ய கன்யான்யம் வரயேத் வரம் ||
(காத்யாயனர்)

இதை விதவா விவாகச்சபையார் தமது கக்ஷிக்கு ஆதாரமான 12-ம் பிரமாணமென்று இரண்டு பிரசுரத்தில் காட்டியிருக்கிறார்கள். இந்த சுலோகத்தில் சில பிழைகள் காணப்படுகின்றன. அவர்கள் சொல்லும் அர்த்தமாவது 'விவாகமான பிறகு ஓர் கன்னிகையின் புருஷன் இறந்தால், மூன்று ருதுகாலம் அதாவது ஆறு மாதம் கழித்தபின் அந்த கன்னிகை புனர் விவாகம் செய்து கொள்ளலாம்.'' விவாஹம் சம்பூர்ணமானதாய் காட்டத்தகும்பதம் இந்த சுலோகத்திலில்லை. வரயித்வா, அன்யம் வரயேத்வரம். என்ற பதங்களைக்கொண்டு அந்தக் கன்னிகை வாக்தானம், மனோதானம் இவைகளையே அடைந்தவள் என்று ஸ்பஷ்டமாக விளங்குகிறது. ஆதலால் இந்த பிரமாணம் அவர்கள் சொல்லும் கக்ஷிக்கு சாதகமாக இல்லை.

(12) அத்பிர் வாசாச தத்தாயாம் ம்ரியேதாதோ வரோ யதி ||
நசமந்த்ரோபநீதா ஸ்யாத் குமாரீ பிதுரேவ ஸா ||
யாவச்சேதா ஹதா கன்யா மந்த்ரைர்யதி நஸமஸ் கிருதா ||
அன்யஸ்மை விதிவத் தேயா யதாகன்யா ததைவ ஸா ||
(வசிஷ்டர்)

இந்த இரண்டு சுலோகங்களை 13-ம் பிரமாணமாக காட்டியிருக்கிறார்கள். ''உதகத்தாலும் வாக்காலும் ஒரு கன்னிகை ஓர் வரனுக்கு கொடுபட்டுப்போய் அந்த வரனிறந்து போகும் பக்ஷத்தில் அந்த பெண்ணுக்கு மந்திர பூர்வகமாய் விவாகமாகாமலிருந்தால் அவள் தந்தையைச் சேர்ந்தவளாகவே ஆவாள். அவள் அன்னியனுக்கு மேற்கண்ட வகைகளால் கொடுபட்டிருந்தாலும் மந்திரங்களால் விவாக சம்ஸ்காரத்தை அடையாதவளாயிருந்தால் அக்கன்னிகையை அன்னியருக்கு விவாக

விதிப்படி தானம் செய்யலாம். சாமானியமான கன்னிகை எப்படியோ அப்படியேதான் இவளுமாவாள்'' என்று அர்த்தம் வெளியாகிறது. இதில் உள்ள ஆஹிருதா என்ற பதத்தை ஆஹதா என்று மாற்றி புருஷ சம்போக மடைந்தவளென்று பொருள் உள்ளது போல் விசித்திரமான அர்த்தத்தை அச்சசபை செய்திருக்கிறது. ''அபத்வம் படித்வா குசோத்யம் கரோதி'' என்று சொல்வது வழக்கம். அதாவது ஒரு வாக்கியத்தை அபத்தமாக படித்து அபத்தமான அர்த்தத்தை பொருந்தச்செய்ய குயுக்திகளை செய்கிறதாம். அதுபோலவே இச்சபையார் இந்த சுலோகங்களுக்கு அர்த்தம் செய்திருப்பதாய் நினைக்க இடமிருக்கிறது. மந்திரோப நீதா என்ற பதத்திற்கு மந்திரங்களால் புருஷ சம்போகமடைந்தவளென்ற எப்படி பொருள் ஏற்படுமோ தெரியவில்லை. விவாகமென்பது ஸ்திரீகளுக்கு உபநயன ஸ்தானம் என்று மனுயாக்ஞவல்க்யாதிகள் சொல்லியிருப்பதை எவரும் மறுக்கமுடியாது. உதகதானம் வாக்தானம் பெற்ற கன்னிகையின் விவாக விஷயத்தை விவஸ்தை செய்ய வந்த பிரமாணம் தான் இது என்பது ஸ்பஷ்டமாய் தெரிய வருகிறது. வரனென்ற பதமும் உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. ஆதலால் இதும் அச்சபையார் சொல்லும் விதவா விவாகத்திற்கு பிரமாணமாக இல்லை என்பதை நேயர்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

(14) நஷ்டே மிருதே ப்ரவர்ஜிதே க்லீபேச பதிதேபதௌ ||
பஞ்சஸ்வாபத்ஸு நாரீணாம் பதிரன்யோ விதீயதே ||
அஷ்டௌ வர்ஷாண்யூ தீக்ஷேத ப்ராம்மணீ ப்ரோஷிதம் பதிம் ||
அப்ரஸூதாது சத்வாரி பரதோன்யம் ஸமாச்ரயேத் ||
க்ஷத்திரியா ஷட் ஸமாஸ் திஷ்டேத் அப்ரஸூதா ஸமாத்ரயம் ||
வைசியா ப்ரஸூதா சத்வாரி த்வேவர்ஷேத்விதரா வஸேத் ||
நாசூத்ராயா: ஸ்மிருத: கால:ஏஷப்ரோஷித யோஷிதாம் ||
ஜீவதிச்ரூயமாணேது ஸ்யாதேஷத்விகுணோ விதி: ||
அப்ரவிருத்தௌது பூதானாம் த்ருஷ்டிரேஷாப்ரஜா பதே:||
அதோன்யகமனே ஸ்திரீணாம் ஏஷதோஷோ நவித்யதே ||

(நாரத ஸம்ஹிதா — அத்யாயம் 12)

இந்த ஐந்து சுலோகங்களை அச்சபையார் துண்டு பிரசுரத்தில் விதவா விவாகத்திற்கு சாதகமான ஸ்மிருதி ப்ரமாணங்களின் கடைசி பிரமாணமாக காட்டியிருக்கிறார். இந்த சுலோகங்களுக்கு அவர்கள் சொல்லும் அர்த்தமாவது:— புருஷனுடைய இருப்பிடம் தெரியாமலிருக்கும் போதும் புருஷனிறந்த பின்பும் ஸன்னியாசம் பெற்ற பின்பும் நபும்ஸகன் என்று தெரிந்த பின்பும் பிரஷ்டனாய்ப் போன பின்பும் ஆக இந்த வகை ஆபத்துகளிலும் ஸ்திரீகள் புனர் விவாகம் செய்து கொள்ளலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. தேசாந்திரம் சென்ற புருஷனுக்காக பிராம்மண ஸ்திரீ எட்டு வருஷம் காத்திருக்கவேண்டும். பிறகு வேறொருவனை புனர் விவாகம் செய்து கொள்ளலாம். க்ஷத்திரிய ஜாதியான ஸ்திரீயாக இருந்தால் ஆறுவருஷம் கார்த்திருக்கவேண்டும், சந்ததி இல்லாதவளாக இருந்தால் மூன்று வருஷம் கார்த்திருக்கவேண்டும். வைசிய ஜாதி ஸ்திரீயாக இருந்து குழந்தை உள்ளவளாக இருந்தால் நான்கு வருஷமும் குழந்தை இல்லாதவளாக இருந்தால் இரண்டு வருஷமும் கார்த்திக்கவேண்டும். சூத்திர ஜாதி ஸ்திரீக்கு காலவரம்பே இல்லை. அவள் புருஷனுக்காக கார்த்திருக்கவேண்டியதில்லை. புருஷன் ஜீவித்திருக்கிறானென்று கேள்விப்பட்டால் மேற்சொல்லிய காலங்களுக்கு இரட்டிப்புக்காலம் கார்த்திருக்கவேண்டுமென்பது விதியாகும். சமாசாரம் தெரியாமலிருந்தால் மேற்சொல்லிய காலம்தான் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. மனுஷ்யர்களின் பதியான பிரம்மாவின் அபிப்பிராயம் இதுவே. ஆகையால் இந்த சந்தர்ப்பங்களில் ஸ்திரீகள் புனர் விவாகம் செய்து கொள்வதில் தோஷமில்லை என்று. இந்த சுலோகங்களையும் சபையார் எழுதியிருக்கும் அர்த்தங்களையும் ஒரு தரம் மேல் வாரியாக வாசித்தவுடன் எப்பேர்ப்பட்ட ஆஸ்திக பண்டிதனாயினும் சற்று மயங்குவான். என்றால் சாமானியர்கள் பிரமை கொண்டு இது விதவா விவாகத்திற்கு சாதகமாயுள்ள பிரமாணமென்று கொண்டாடுவார்களென்று நான் சொல்லவேண்டியதில்லை. ஆதலால் இந்த சுலோகங்களை கொஞ்சம் விஸ்தாரமாகவே விசாரம் செய்யவேண்டியிருக்கிறது.

இந்த சுலோகங்கள் நாரத ஸ்மிருதியைச் சேர்ந்ததென்று விதவா விவாகவாதிகள் சொல்லுகிறார்கள். இவைகளின் அர்த்தங்களைப்பற்றி யோசிக்கும் முன் இந்த சுலோகங்கள் நாரத ஸ்மிருதியைச் சேர்ந்ததா அல்லவா என்பதை விசாரிப்போம். அவ்வாறு நிரவிசாரித்தால் இந்த சுலோகங்கள் நாரத ஸ்மிருதியைச் சேர்ந்தவைகள் அல்லவென்றும் புதிதாய் எவராலேயோ சேர்க்கப்பட்டிருக்கிறதென்றும் தெரிய வருகிறது. எப்படியெனில் வர்ஜ்பர்க் யூனிவர்ஸிடி ஸம்ஸ்கிருத புரொபசர் ஜூலியஸ்ஜாலி பி. எச். டி. என்றவர் உண்மையான நாரத ஸ்மிருதி புஸ்தகத்தை பதிப்பிக்கவேண்டு பல தேசங்களிலிருந்து ப்ராசீனமான பல பிரதிகளை சோதித்து 1885ஞ்ஸ்த்தில் கல்கத்தாவில் ஏஷியாடிக் அச்சுக்கூ

டத்தில் "நாரதஸம்ஹிதை" என்ற புத்தகத்தை பதிப்பித்திருக்கிறார். அந்த பதிப்பில் உண்மையான நாரத ஸ்மிருதி வாக்யங்களுக்கெல்லாம் ஓர் நக்ஷத்திர அடையாளம் வைத்திருக்கிறார். அவர் அதன் முடிவுரையில் சொல்வதாவது "நாரத ஸ்மிருதியைச் சேர்ந்த சுலோகங்களுக்கெல்லாம் நக்ஷத்திர அடையாளத்தை கொடுத்திருக்கிறேன். ஆகையால் நக்ஷத்திர அடையாளம் உள்ள சுலோகங்களெல்லாம் நாரத ஸ்மிருதியைச் சேர்ந்த உண்மையான சுலோகங்கள். அவைகளை பிரமாணமாய் ஏற்றுக்கொள்ளலாம் மற்ற சுலோகங்களை அவ்வாறு சொல்லலாகாது" இந்த சுலோகங்களோ 12-வது அத்யாயத்தில் 97, 98, 99, 100, 101 வதாக காணப்படுகின்றன. 93-வது சுலோகம் முதல் எல்லா சுலோகங்களுக்கும் நக்ஷத்திர அடையாளம் கொடுக்கப்படவில்லையாகையால் மேற்கண்ட சுலோகங்கள் நாரத ஸ்மிருதியைச் சேர்ந்ததல்லவென்றும் பல காரியங்களை உத்தேசித்து நவீனர்கள் சேர்த்திருக்கலாமென்றும் நிச்சயமாய் நம்ப இடமிருக்கிறது. மேலும் இந்த வாக்யங்களை எந்த ரிஷியும் சொன்னதாய் தெரியவில்லை. ஆகையால் இதை பிரமாணமென்று வைத்துக்கொண்டு ஓர் கக்ஷியை ஸ்தாபிக்க முன் வருவதே மதியீனமாகும்.

கக்ஷிக்காக இவைகள் உண்மையானவைகளென்றே வைத்துக் கொள்வோம். விதவா விவாகத்தை ஸ்தாபிக்க முன் வந்த இந்த சபையாருக்கு இந்த சுலோகங்கள் என்ன ஆதரவு அளிக்கின்றன என்பதை நாம் அறிய முடியவில்லை. நஷ்டேம்ருதே என்ற வாக்யம் மனுஸ்மிருதியைச் சேர்ந்ததென்று ஏற்கனவே இச்சபையாரால் முதல் பிரமாணமாக கூறப்பட்டு அதற்கு நாமும் பதிலளித்தாய் விட்டது. மற்ற நான்கு சுலோகங்களிலும் பர்த்தா இறந்துபோன ஸ்திரீயைப்பற்றி பிரஸ்தாபமே இல்லை. ப்ரோஷிதம்பதிம் என்று தேசாந்திரம் சென்ற புருஷனின் பார்யாள் செய்யவேண்டிய விதிகளைப்பற்றிச் சொல்லவந்த சுலோகங்கள் என்று நன்கு விளங்குகிறது. நஷ்டேம்ருதே என்ற முதல் சுலோகத்திலுள்ள நஷ்டே "புருஷன் தேசாந்திரம் சென்றால்" என்பதை விளக்கிக்காட்டவே மற்ற நான்கு சுலோகங்களை அடுத்தாப்போல் ஸ்மிருதிகாரரான நாரதர் சொல்லியிருப்பாரென்று நாம் எண்ணவேண்டும். ஆகையால் இது பர்த்தா இறந்து போனால் என்பதைப்பற்றி சொல்ல வந்ததாய் ஆகாது.

(தொடரும்.)

ஸ்ரீநாராயணபண்டிதாசாரியார் இயற்றிய

ஸ்ரீ மத்வ விஜயம்.

ஏழாவது ஸர்க்கம்.

(முன் 136-ம் பக்கம் தொடர்ச்சி.)

1. மேற்கண்டவாறு ஸ்ரீமத்வாசாரியார் ஹிமவத் பர்வதத்தைப்பார்த்தபின் அந்த ஹிமயமலைப் பிராந்தியத்திலேயே அதன் வடபாரிசுவத்தில் எலந்தை மரங்கள் அநேகம் அதிகமாய் மண்டியிருப்பதாயும் மகாலட்சுமியின் ஸன்னிதானம் பெற்றதாயும் மிகப் பிரசித்தமானதாயுள்ள பரமரான ஸ்ரீவேதவியாஸரின் ஆசிரமமான பதரிகாசிரமத்தைக்கண்டார். 2. அங்கு பனியையும் மழையையும் வெய்யிலையும் சகித்திருப்பவர்களாயும் மஹத்தான யக்ஞங்களை செய்து பிரசித்தி பெற்றவர்களாயும் பிராம்மணர்களுக்கு ஆதாரமாய் இருப்பவர்களாயும் விஷ்ணுவின் சரணத்தை ஸ்மரிப்பவர்களாயுமுள்ள ரிக் யஜுஸ் ஸாமம் முதலான பலவகை வேதசாகைகளுள்ள மகரிஷிகளும் இவ்வாறே பனியையும் மழையையும் வெய்யிலையும் சகித்திருப்பவைகளாயும் மஹத்தான யக்ஞங்களில் உபயோகப்படும்படி பரிசுத்தமானவைகளென்று சாஸ்திரங்களில் பிரசித்திபெற்றவைகளாயும் த்விஜர்களாகிய பக்ஷிகளுக்கு ஆசிரமமாய் இருப்பவைகளாயும் விஷ்ணு பதமாகிய ஆகாயம் வரை வளர்ந்து அதைத் தொடுபவைகளாயும் உள்ள விசித்ர விருக்ஷங்களும் ஆகிய இவ்விருவகை சாகையார்களும் பிரகாசித்தனர். 3. காதுக்கு இனிமையான சப்த ஸமூகங்களுள்ள பச்சைக்கிளி முதலான அழகிய சிறகுகளைக்கொண்ட பக்ஷிகளைக் கொண்டதாயும் கமல மலரை மிக்கப்பிரியமாகக்கொண்டு அந்த கமலமலர்தேனைப்பருக திடமான மனம் கொண்ட வெண்மையான உத்தம ஹம்ஸபக்ஷிகளாலும், அப்படியே, காதுக்கு இனிமையாய் அமிருதம் போன்றதாயுள்ள ஸ்ரீமத் பாகவதாதி சாஸ்திரங்களின் வசன சமூகங்களுள்ள சுகாசாரியாள் முதலான மங்கள சித்தாந்தமுள்ள பிராம்மணர்களாலேயும் கமலாதேவியின் மிக்கப்ரியரான ஸ்ரீஹரியிடம் திடமான மனங்கொண்ட த்ரிகரண சுத்தமுள்ள பரமஹம்ஸர்களாகிய உத்தம

யோகிகளாலும் கூடியதாய் அந்த பதரிகாசிரமம் விளங்கியது.
4. புஷ்பஜாதிகளாலும் அப்படியே தேவஸமூகங்களாலும் நிறைந்த
தாயும் பகவத்பக்தர்களின் அபீஷ்டத்தை எல்லாம் அளிப்பதாயும்
க்ஞானம் பக்தி முதலானவைகளின் பலமில்லாதவர்களால் போக
முடியாததாயும் ஒருவருக்கொருவர் மாத்ஸரியம் முதலானவை
களில்லாத ஜனங்கள் உள்ளதாயுமுள்ள அந்த ஸ்ரீவேதவியாஸரின்
ஆசிரமம் இதே லக்ஷணங்களைக்கொண்ட வைகுண்டம் போலவே
இருந்தது. 5, இப்பேர்ப்பட்ட ஆசிரமத்திற்குள் பிரவேசிப்பவ்
ரான முப்பத்திரண்டு உத்தம புருஷ சரீர லக்ஷணங்களுள்ள ஸ்ரீமத்
வாசாரியாரின் குணவிசேஷங்களை நன்கு அறிந்தவர்களான அந்த
ஆசிரமத்திலிருந்த மகரிஷிகள் மிக்க ஆச்சரியத்துடன் பார்த்து
அடியிற்கண்டவாறு யோசித்தனர். 6. இணையற்ற தங்கப்பனை
மரம்போல் நீண்டு உருண்டு திரண்ட புஜாதி அவயவங்களுள்ள
சரீர வடிவினரும் கமலக்கண்ணரும் மாசற்ற சந்திர சுந்திர வதன
ரும் பெருத்த யானையின் நடையழகரும் முழங்கால்வரை நீண்ட
புஜமுள்ளவருமாய் ஸ்ரீ வியாஸரை நோக்கிச்செல்லும் இதுவரை
நாம் பார்த்திராத இந்த புருஷர் யாராய் இருக்கக்கூடும். 7. சந்
திரன் மிகமிக சௌம்யமான ரூபத்துடனிருப்பவன், சூரியனே
எப்பொழுதுமே தீக்ஷண்யரூபத்துடனிருப்பவன்; ஆகவே அநேக
குணங்களுக்கு கடலாயிருக்கும் இந்த புருஷருக்கு ஒப்பிட உல
கில் ஒருவரும் கிடைக்கமாட்டார்கள். 8. இவ்வளவு தூரம் நடந்து
வந்த சிரமமில்லாதவரும் ஒருவராய் எப்படிச்செல்வதென்ற பயமு
மில்லாதவருமான இந்த புருஷர் ஸன்யாஸிகளுக்குரிய காஷாயம்
தண்டம் கமண்டலம் முதலான சின்ஹங்களை தரித்திருக்கிறார்.
மனுஷ்ய ஸ்வபாவமுள்ள சரீரங்கொண்டவராயிருப்பினும் எங்க
ளுக்கு மகா ஆச்சரியத்தை விளைவிக்கிறார். 9. வேதங்களுக்கு
நாதரான ஸ்ரீவேதவியாஸரைப் பார்க்கவிரும்பி ஸன்யாஸி வேஷத்
தைத்தரித்து வருபவர் ஸமர்த்தரான நான்முகம் படைத்த பிரம்
மாவோ அல்லது வாயு பகவானோ இருக்கவேண்டும். இல்லாவிடில்
வேறு யாரும் இம்மாதிரி எல்லா முப்பத்திரண்டு உத்தம புருஷ
லக்ஷணங்களுள்ளவராய் இருக்கமுடியாது. 10. குதூஹலமடைந்த
மனதுள்ள அந்த ஆசிரமவாசி முனிகளால் யேற்கண்டவாறு

யோசித்து பார்க்கப்படும் சரீர லக்ஷணங்களுள்ள வரும் வேகமான
நடையுள்ளவருமான ஸ்ரீமத்வாசாரியார் தூரத்தில் தேவர்களின்
பாரிஜாத விருக்ஷம் போன்றதான பதரி விருக்ஷத்தைக் கண்டார்.
11. அந்த பதரி (எலந்தை) விருக்ஷம் எப்படி இருந்ததென்றால்
ஸ்ரீவேதவியாஸரை ஸேவைசெய்வதற்காக அவருடைய சமீபத்தில்
மிருதுவான சரீரமுள்ளவரும் உயர்ந்திருப்பவரும் ஆயிரம் படங்
களால் அகன்றிருப்பவருமான ஆதிசேஷன்போல் அநேக சாகை
களாகிய படங்களில் பலவகை நிறமுள்ள எலந்தை பழங்களாகிய
பலவகை ரத்னங்களைக் கொண்டதாயும் மிருதுவான பட்டையுள்ள
தாயும் உயர்ந்தும் பரவியும் வளர்ந்ததுமாயிருந்தது. 12. மேலும்
அந்த பதரி விருக்ஷம் பக்ஷிராஜனான கருடன் போலுமிருந்தது.
கருடன் அதி ஆச்சரியகரமான பலவகை வர்ணமுள்ள சிறகு
களுடனிருப்பான், முழங்கால் வரையில் தங்கத்திருமேனியும் நாபி
வரை சாம்பல் நிறமும் கழுத்துவரை இரத்னம்போல் சிகப்பு நிற
மும் கழுத்துக்குமேல் வெள்ளை நிறமும் கேசங்கள் நீலவர்ணமும்
ஆகஐந்து வர்ணங்களுள்ளவன்; மகேந்திரனின் வஜ்ஜிராயுதத்தை
அமிருதா பஹாரம் செய்த சமயம் தடுத்தவன்; கசியபமுனியின்
குமாரன்; லக்ஷ்மீபதியான நாராயணனுக்கு மக்க ப்ரியமானவன்;
இந்த பதரி விருக்ஷமும் இவ்வாறே அதி ஆச்சரியமான பச்சை
மஞ்சள் முதலான பலவகை வர்ணமுள்ள இலைகளைக் கொண்டிருந்
தது. மாமும் பலவகை வர்ணத்துடனிருந்தது. சூரியனின் கிர
ணத்தைத் தடுக்கும்படி அவ்வளவு அடர்ந்து படர்ந்து வளர்ந்திருந்
தது. அங்குள்ள மகரிஷிகளுக்கு ஆனந்தத்தைத்தந்திருந்தது.
லக்ஷ்மிபதியான ஸ்ரீ வேதவியாஸருக்கு அதிகப்ரியமாயிருந்தது.
13. மேலும் இந்த பதரி விருக்ஷம் உருவடைந்தவேதம் போல்
இருந்தது. எப்படி எனில். வேதம் மோக்ஷ ரூபமாகிய மிக உத்தம
மான பலனைத்தரும் விஷ்ணு பக்தி இல்லாத வைஷ்ணவர்களால்
அறியப்பட முடியாதது. பிரமாணங்களாயிருக்கும் புராணங்கள்
மகாபாரதம் இவைகளை இவை வேதார்த்தத்தை நிர்ணயித்துத் தாக்
கூடியவைகளாயிருப்பதன் நிமித்தம் ஆசிரயித்திருக்கிறது, ஐதரேய
சாகை பாஷ்கல சாகை சாகல சாகை முதலான பலவகைச் சாகை
களுடனிருக்கிறது, இவ்வாறே இந்த பதரி விருக்ஷமும் அமிருதம்

208734

போல் ருசிகரமாயும் ஜராமரணமில்லாமல் செய்வதாயுமுள்ள பெரிய பெரிய இலந்தைப்பழங்களைத் தருகிறது; ஹரிபக்தி இல்லாத அவைஷ்ணவர்களால் இந்த பதரிகாசிரமும் அடையமுடியாததலால் அதிலுள்ள அந்த விருக்ஷத்தை அடையமுடியாததாகும், ஸாத்விகமான அநேகபுராணங்கள் மகாபாரதம் இவைகள் இந்த மரத்தினடியில் வைக்கப்பட்டிருப்பதால் அவைகளுக்கு ஆசிரமாயிருந்துவருகிறது. அநேக கிளைகளுடனிருக்கிறது. 14. இவ்வாறு அந்த இலந்தை மரத்தை தரிசித்தபின் பூர்ணப்ரக்ஞரான ஸ்ரீமத்வாசாரியார் அந்த விருக்ஷத்தினடியில் மிக்க விசாலமாயும் பரிசுத்தமாயும் மனோஹரமாயுமுள்ள திண்ணையின்நடுவில் தேவலோகத்தில் தேவர்களிருப்பதுபோல் முனிச்ரேஷ்டர்கள் உட்கார்ந்திருப்பதைக் கண்டார். 15. அந்த தபஸ்விகள் எப்படியிருந்தார்களென்றால் ஸப்தர்களாய் பிரகாசித்திருந்தபோதிலும் கணக்கற்றவர்களாய் இருந்தார்கள், அதாவது ஜடாமண்டலத்துடன் பிரகாசித்துக்கொண்டு கணக்கற்ற பெருங்கூட்டத்தார்களாய் விளங்கினார்கள். குணமுள்ளவர்களாய் இருந்தபோதிலும் குணங்களை விட்டவர்களாய் இருந்தார்கள். அதாவது குணமாகிய யக்ஞோபவீதத்தையும் ஞானம் பக்தி முதலான குணங்களையும் கொண்டிருந்தார்கள். ஸத்வ குணம் ரஜோ குணம் தமோ குணமாகிய ப்ராகிருத குணங்களையும் யக்ஞோபவீதத்தையும் விட்ட ஸன்யாஸிகளாயும் இருந்தார்கள். க்ரோதம் மதம் முதலான அரிஷ்டவர்க்கங்களை விலக்கியவர்களாயுமிருந்தார்கள். விஷயபோகங்களை விட்டவர்களாயிருப்பினும் எப்பொழுதும் வாயுவை ஆகாரமுள்ளவர்களாயிருந்தார்கள். ஸப்தம் என்னும் கணக்குள்ளவர்களாயிருப்பினும் கணக்கற்றவர்களென்றும், குணமுள்ளவர்களாய் இருப்பினும் குணத்தை விட்டவர்களென்றும், போகத்தை விட்டவராய் இருப்பினும் ஆகாரமுள்ளவர்களாயிருந்தவர்களென்றும் சொல்வதால் இந்த சுலோகத்தில் விரோதாபாஸ அலங்காரமிருப்பதை அறிய வேண்டியதாகும். இந்த ரிஷிக்கூட்டத்தில் யக்ஞோபவீதமுள்ளவர்களும் யக்ஞோபவீதமில்லாதவர்களும் க்ரோதாதிகளில்லாதவரும், விரக்தர்களும் காற்றுகாரமுள்ளவர்களுமிருந்தார்களென்று சொன்னதால் பிரம்மசாரிகள் கிருஹஸ்தர்கள் வானப்ரஸ்தர்கள்

ஸன்யாஸிகள் ஆகிய நான்கு ஆசிரமத்தார்களுமிருந்ததாய் தெரியவருகிறது. 16. பூர்ணப்ரக்ஞரான அந்த ஸ்ரீமத்வாசாரியார் அந்த ரிஷிக்கூட்டத்தின் நடுவில் இருந்துவருகிறவராய் மூன்று உலகங்களுக்கும் அலங்காரமாயிருக்கும் ஸத்யவதி குமாரராயுள்ள ஸ்ரீவேதவியாஸ மூர்த்தியான நாராயணனைக் கண்ணாரதரிசித்தார். 16. இந்த பூர்ணப்ரக்ஞர் காமாதி தோஷங்களில்லாமல் மிக்க பரிசுத்தமான தன் ஹிருதய கமலத்தில் நன்கு இடைவிடாது இந்த வேதவியாஸரை கண்டு கொண்டிருந்தபோதிலும் தற்போது அவரை நூதனமாய் காண்பதுபோல் கண்டு பரமாச்சரியமடைந்து இவ்வாறு யோசிக்கலானார். (தொடரும்.)

கும்பகோணத்தின் மகத்வம்.

ஓர் உபன்யாஸம்.

கும்பகோணம் கல்சரல் அசோஸியேஷனின் ஆதரவில் திவான்பகதூர் R. ரகுநாதராயர் அவர்களின் பப்ளிக் லைப்ரரி ஹாலில் 1-12-35 பானுவாரத்தன்று இந்த மாத்வமித்திரன் பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ. ம. வே. பாகவத ரங்கனாதாசாரியார் செய்த உபன்யாஸத்தின் சுருக்கமாவது:— "நைதத்க்ஷேத்திரஸ்ய க்ஷேத்திரம் ந பூதோ ந பவிஷ்யதி" என்று ஒவ்வொரு க்ஷேத்திர மகாத்மியத்திலும் இந்த க்ஷேத்திரத்திற்கு ஸமானமான க்ஷேத்திரமில்லை என்றும் இந்த தீர்த்தத்திற்கு ஸமானமான புண்ணியகரமான தீர்த்தமிப்போதுமில்லை எப்போதுமில்லை என்றும் சொல்லப்பட்டு வருகிறது. இதற்கு அர்த்தவாதம் என்று பெயர். அந்தந்த க்ஷேத்திரம் உத்தமமானது என்றறிவிப்பதற்காக அவ்வாறு சொல்வது ஸத்ஸம்பிரதாயம். அதன்படித்தான் கும்பகோணத்தைப் பற்றியும் அதிகமாய் எமது புராணங்களில் சொல்லப்பட்டிருப்பதாய் எண்ணுவதற்கில்லை. கும்பகோண மகாத்மியம் பவிஷ்யோத்தரபுராணம் க்ஷேத்திரகண்டத்தில் 64 அத்யாயங்களால் கூறப்பட்டிருக்கிறது. மகாபாரதத்திற்கு சேர்ந்ததாயுள்ள சேஷதர்மத்திலும், அக்னிபுராணத்திலும் பிரஸ்தாபம் செய்யப்பட்டிருக்கிறது.

உலகில் காசியும், கயையும் உத்தம க்ஷேத்திரங்கள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன, கயைக்கு சுற்றிலும் 18ஸ்தானங்களிருப்பதுபோல் கும்பகோணத்திற்கும் சுற்றிலும் 18 மகாசிவ க்ஷேத்திரங்களிருக்கின்றன. காசியைவிட கும்பகோணம் உத்தமம் என்பதற்கு அநேக பிரமாண வாக்யங்களிருப்பதுடன் அநேக உபாக்யானங்கள் மூலமாயும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பாவனன் என்ற பிராம்மணன் தீர்த்தயாத்திர கிரமத்தில் கும்பகோணத்திற்கு வந்திருந்தபொழுது அவனுடைய சிஷ்யனுக்கு பசி ஏற்பட்டு தனியான மூட்டையிலிருப்பதைச் சாப்பிடலாமென்று அதை அவிழ்த்துப்பார்க்கையில், அந்த மூட்டையில் ஓர் பாத்திரத்தில் புஷ்பங்களிருந்ததைப் பார்த்து, அவருக்குத் தெரியாமல் அதை முன்போல் கட்டிவைத்துவிடவும், அந்த பாவன ப்ராம்மணன் காசிக்குப்போய் கங்கையில் தன் பிதாவின் அஸ்திக்ஷேபணத்திற்காக சங்கல்பம் செய்துகொண்டு அந்த மூட்டையை அவிழ்த்து எலும்புகளை எடுக்கும்பொழுது, அந்த சிஷ்யன், ஸ்வாமி! இந்த மூட்டையிலுள்ளது எலும்புகள் என்று நான் அறியேன். கும்பகோணக்ஷேத்திரத்தில் நான் திருட்டுத்தனமாய் என் ஆகாரத்திற்காக சோதித்துப்பார்க்கையில் இவைகள் புஷ்பங்களாய் இருந்தன. தாங்கள் புஷ்பங்களை கொண்டுவந்திருந்ததாய் எண்ணியிருந்தேன். இப்போது இந்த க்ஷேத்திரத்தில் இவைகள் மீண்டும் எலும்புகளாயிருப்பதைப்பார்த்தால் அந்த க்ஷேத்திரத்தில் விசேஷம் இருப்பதாய் தெரியவருகிறது, என்று சொல்ல, அந்த பாவனன் கங்கையில் அஸ்திக்ஷேபணம் செய்யாமல் கும்பகோணம் வற புறப்பட்டபொழுது அவ்விடத்திலுத்திலுள்ள கங்காபுத்திரர்கள் போகலாகாது என்று அவரை வழி மறைக்கவும் காசியைவிட கும்பகோணம் தான் உத்தமமான முக்தி க்ஷேத்திரம். அங்கு அஸ்திக்ஷேபணம் செய்வதுதான் உத்தமம், பிராம்மணனை விட்டுவிடுங்கள் என்று அசரீரி வாணியாயிற்று. அதன் மீது இந்த தத்வத்தை அங்குள்ளோர்களும் ஒப்புக்கொண்டார்கள் என்றும் அந்த பிராம்மணனும் கும்பகோணம் வந்து சக்ர தீர்த்தத்தில் அஸ்திக்ஷேபணம் செய்ததாயும் உபாக்யான மூலமாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மகாஸ்மசானமென்றும் அவிமுக்தக்ஷேத்திர

மென்றும் அதனால் மகா உத்தமமென்றும் கருதப்பட்டிருக்கும் காசியைவிட கும்பகோணம் உத்தமமென்று உபாக்யான மூலமாய் நிரூபிக்கப்பட்டிருப்பதுடன் கும்பகோணத்தில் பித்ருக்ரியைகள் செய்யும் ஓர் பிள்ளையாவது பிறக்கமாட்டானாவென்று பித்ருக்கள் எதிர்பார்ப்பதாய் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே பல க்ஷேத்திரங்களில் அன்ன சத்திரங்கள் போட்ட மைசூர் மகாராஜா இந்நகரில் சக்ர தீர்த்தக்கரையில் சரமக்ரியை சாவடியைக் கட்டி வைத்திருக்கிறார். அதில் ஜனங்கள் பித்ருக்ரியைகள் செய்வதால் மகத்தான புண்யபலன் ஏற்படுமென்று க்ஷேத்திர மகாத்மியத்தால் அவர் கண்டு கொண்டாரென்று நன்கு புலப்படுகிறது. மேலும், கங்கா, சிந்து, ஸரஸ்வதி, யமுனை, கோதாவரி, நர்மதா, கிருஷ்ணை, ஸரயூ, காவேரி ஆகிய ப்ரதானமான ஒன்பது மகாநதிகள் தங்களிடம் யாத்ரீகர்கள் விட்டுப்போயிருந்த பாபங்களைப் போக்கிக்கொள்ள பரமசிவனைக்கேட்டுக்கொள்ள காசியிலுள்ள விசுவநாதரே இந்த மகாநதிகளை அழைத்துக்கொண்டு கும்பகோணம் மகாமக ஸரோவரத்தில் மிக்க வைபவத்துடன் வந்துசேர்ந்ததாயும் காசிவிசுவநாதருடன் நவகன்னிகைகளின் திருவுருவங்கள் இருந்துவருகின்றன. புத்ராதி பாக்யங்களைப் வேண்டுகிறவர்கள் இவர்களை ஸேவித்து இன்றைக்கும் மகாபலன்களை அடைந்து வருகின்றனர். இந்த காசி விஸ்வநாதர் நவகன்னிகைகளுடன் வரும் கோலாகலத்தைப் பார்ப்பதற்காக முன்பு கிழக்குமுகமாய் மகாமகக்குளக்கரையிலிருந்த பலேசுவரர் மேற்கு முகமாய் திரும்பி அவர் அபிமுகேசுவரர் என்று விளங்கி வருகிறார். இந்த நிகழ்ச்சியாலும் காசியை விட இந்நகர் உத்தமமென்று தெரியவருகிறது. கும்பகோண மகாத்மியம் விஷயமாய் விஸ்தாரமாய் என்னால் தனி நூல் எழுதப்பட்டிருப்பதால் அவைகளை பிரஸ்தாபிப்பதில்லை. இந்த க்ஷேத்திரம் உத்தமமென்பதற்கு மட்டில் சில முக்யமான அத்தாக்ஷிகளை கூறுகிறேன். இந்த க்ஷேத்திரம் மிகவும் புராதனமான க்ஷேத்திரமாகும். ஜகத்தின் ஸிருஷ்டியாரம்பகாலத்திலேயே உண்டானது என்பதற்கு ஆதிகும்பேசுவரரே நிதர்சனமாவார். ஸிருஷ்டி பீஜங்களடங்கிய கும்பம்ப்ரளய காலத்தில் மேரு பர்வதத்திலிருந்து மெதுவாய் மிதந்து இந்நகரின் சமீபத்தில் வரும்பொழுது ப்ரளயம் அடங்கி தங்கிவிடவும் வேடரூபியான பரமசிவன் அதை கோண ப்ரதேசத்தில் பேதிக்க உள்ளேயிருந்த அமிருதம் வெள்ளமாய்ப் பெருகி இந்த க்ஷேத்திரத்தை அமிருத ஸ்தலமாய்ச் செய்ததாயும் அந்த பேதமடைந்த கும்பத்தின் மீது, வேடரூபியான பரமசிவனே அமிருதத்தால் மணலைப் பிடித்து

லிங்கமாய்ச்செய்து ப்ரதிஷ்டை செய்தாரென்றும் அவரே ஆதி கும்பேசுவரரென்றும் அதனால் இந்நகருக்கு கும்பகோணம் என்று பெயர் வந்ததாயும் தெரியவருகிறது. ஆகவே சிருஷ்டியாரம்ப காலத்திலேயே இந்நகர் இருந்துவருவதால் இந்நகரின் புராதனத்தைப்பற்றி நாம் அதிகம் சொல்லவேண்டியதில்லை. திருப்பதி ஸ்ரீனிவாஸப்பெருமானே மகாலட்சுமிக்கு பயந்து, அவளால் விரட்டப்பட்டவராய் இவ்வூரில் பதுங்கி பாதாள வெங்கட்டரமணராய் இருப்பதால் இது திருப்பதி க்ஷேத்திரமாகிறது. கஞ்சி வரதராஜன் மதங்கமுனிவருக்கு இங்கு ப்ரத்யக்ஷமாயிருப்பதால் இந்நகர் காஞ்சியே ஆகும். ஸ்ரீரங்கவிமானமோ இரண்டாக மாறி அந்த ஸோமச்சந்த விமானமே இந்நகருக்கு ஸ்ரீசாரங்கபாணியாய் வந்ததால் இந்நகர் ஸ்ரீரங்கமாகும். ஸ்ரீவராகர் ஹிரண்யாக்ஷனை ஸம்ஹரித்து வராஹ தீர்த்தத்தின் வழியாய் வெளிவந்திருப்பதால் இந்நகர் ஆதி வராஹ க்ஷேத்திரமாகும். இந்நகரின் பெருமையைக் கண்டும் மகாமக தீர்த்தக்கரையில் எப்போதும் வசித்திருக்கவும் எங்குமில்லாத வழக்கத்தை அனுஸரித்து சதுர்முகப்ரம்மா காயத்ரீ தேவியுடனும் ஸரஸ்வதியுடனும் இந்நகரில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்றார். பிரம்மன் கோயில் இந்நகரில் தான் அதிசயமானது. நாராயணர் இந்நகரில் இருப்பதால் இது பதரி க்ஷேத்திரமாகும். பத்துதடவை பகவான் இங்கு தசாவதாரம் செய்திருக்கிறாரென்று தசாவதாரங்களின் கோயிலுமிருந்துவருகிறது. அநந்த பத்மநாபன் மகாலட்சுமியில்லாமல் விலகியிருந்து இந்நகரில் லட்சுமியுடன் சேர்ந்ததால் இது பத்மநாப க்ஷேத்திரமுமாகும். ஹரி வம்சத்தில் ஸ்பஷ்டமாய் காவேரி கங்கையே என்று சொல்லபட்டிருக்கிறபடியால் இந்நகர் கங்காதீரமாகும். இப்பேர்ப்பட்ட மகாமகிமைகளைக் கொண்டிருப்பதால்தான் கசியபமுனிவர் இந்நகரிலேயே தன் ஆசிரமத்தை வைத்துக்கொண்டிருந்தார். அவருக்கு லக்ஷ்மி நாராயணரும் உடல் கிருஷ்ணரும் ப்ரத்யக்ஷமாயிருக்கின்றனர். இங்கு மார்க்கண்டேயர் விபண்டகர் ரோமசர் ஆதிசேஷன் தக்ஷகாதி நாகர்கள் பாஹ்லீகராஜன் ஹேஹயராஜன் கலிங்கராஜன் முதலிய பல மகாராஜர்கள் யுதிஷ்டிராதிகள் இவர்கள் போன்ற எண்ணிறந்த மகான்கள் இங்கு வாசம் செய்ததாய்த்

தெரியவருகிறது. இது சம்பந்தமான அநேக அற்புதங்கள் கும்பகோண மகாத்மியத்தை விமரிசை செய்ததாலேயே நன்கு விளங்கும். இந்த மகாத்மியத்தைப் பார்த்தால் இது சைவர்கள் செய்ததோ அல்லது வைஷ்ணவர்கள் செய்ததோ என்று நிச்சயம் செய்யக்கூடியதாயில்லை. ஆகவே சிவனையும் விஷ்ணுவையும் ஆராதிக்கும் இவ்விரண்டு மதத்தார்களுக்குப்பொதுவான மாத்வர்கள் செய்ததாகவே நிச்சயிக்கலாம். ஸ்ரீவேதவியாஸர் தான் மாத்வர் ஆவார். ஸ்ரீமத்வாசாரியார் தான் ஸ்ரீவேதவியாஸருக்கு விஷ்ணுத்தன்மையை நிரூபித்து தன் ஆசாரியன் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். ராமானுஜ மதத்தாரான வேதாந்த தேசிகர் போன்றவர் வியாஸரை நாம கல்சனரிஷி; அவர் ஓர் ஸாமானிய ரிஷி என்றும் சங்கராசாரியார் அவரை கன்னத்திலடித்து வாதத்தில் ஜயித்திருப்பதாயும் சொல்லிக்கொண்டிருக்கிறார். மாத்வ மதத்தின் கொள்கைகளுக்கேற்றவாறு இந்த க்ஷேத்திரம் முக்தி க்ஷேத்திரமென்று சொல்ல இந்த நகரின்நிலை வெகு பொருத்தமாய் இருந்துவருகிறது. சிதம்பர க்ஷேத்திரம் முதலில் கோவிந்தராஜருடைய க்ஷேத்திரமாக இருந்து பிறகுதான் நடராஜர் அங்கு வந்து சேர்ந்தார். இந்நகர் அப்படியல்ல. மனதிற்கு அபிமானி தேவதையான பரமசிவனை கும்பேசுவரனுடைய க்ஷேத்திரமாக இருந்து அவருடைய உபாஸனை கிரமத்தால் சுத்தமான சித்தத்திற்கு அபரோக்ஷானு பூதி ஏற்படுவதுபோல் பரப்ரம்மமான ஸ்ரீசாரங்கபாணியின் ஸமாகமம் ஏற்பட்டது. மற்றொரு வகையாயும் இந்நகரின் நிலைமையை பரிசோதிக்கலாம். காவேரி தீரத்திலுள்ள இந்நகருக்கு கிழக்கு பாகம் த்வாரமாகும். மேற்கு திக்கிலிருந்து பார்த்தால் தக்ஷிணாவர்த்தஸ்தானமாகிய திருவலஞ்சுழியில் சுவேத விநாயகர் இருக்கிறார். அவருக்கு முன்னாடி பார்வதியாகிய மங்களாம்பிகை, அவருக்கு முன்னாடி பரமசிவனாகிய கும்பேசுவரர். அவருக்கு முன்னாடி காயத்ரி ஸரஸ்வதியுடன் சதுர்முகப்ரம்மா. அவருக்கு முன்னாடி ஞான சமுத்ரமாகிய லக்ஷ்மி ஸரோவரமென்னும் பொற்றாமரை. அதற்கு முன்னாடி அந்த பகவத் ஞானத்தை பானம் செய்கின்ற மகாலட்சுமியாகிய கோமளவல்லி. அவளுக்கு முன்னாடி ப்ரணவப்ரதிபாத்யராகிய

ப்ரணவாத்மக விமானத்திலிருக்கும் பரப்ரம்மமாகிய சாரங்கபாணி. சிவனுக்கும் லக்ஷ்மிக்கும் நடுவில் பிரம்மா சிறிது தூரம் ஒதுங்கி இருக்கிறாரென்று நேராக நடுவில் ஸ்ரீவியாஸராஜர் வாயு பகவானை ப்ரதிஷ்டை செய்திருக்கிறார். ஆகவே எமது மதத்தின்படி தாரதம்மிய கிரமமாய் உபாஸனைசெய்ய பகவன் மூர்த்திகளின் அமைப்பும் வெகு சமத்காரமாய் இருந்துவருகிறது. பிரம்மாவும் ருத்திரனும் குறைந்தவர்களென்று அவர்களுக்கு சாபம் கொடுத்து விஷ்ணுதான் ஸர்வோத்தமரென்று உலகத்திற்கு ப்ரசித்தமாக காட்டிய மகரிஷிகளின் கம்மிஷனரான பிருகுமுனி ஹேமரிஷியாய் பிறந்து இந்நகரிலேயே இருந்து விஷ்ணுதான் ஸர்வோத்தமர் என்று காட்டிக்கொண்டிருக்கிறார். பல புராணங்களிலும் பிரம்மஸூத்ராதிகளிலும் விஷ்ணு ஸர்வோத்தமர் என்று ஸ்பஷ்டமாய் காட்டிய பாதராயணரான ஸ்ரீவேதவியாஸரும் பாதராயணபுரியாகிய இந்நகர் வாணுதுறையில் வாசஞ்செய்திருந்தார். ஆதலால் தான் இந்நகரின் துவரேத்திலேயே ஸ்ரீ சாரங்கபாணி இருந்துகொண்டு கும்பேசுவராதி தேவர்களை தம் பின்னடி வைத்துக்கொண்டிருப்பது எமது மத்வமதத்தின் கொள்கைகளை ஊர்ஜிதப்படுத்துகிறது. ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் சக்ரபாணிஸ்வாமியை சக்கரத்தாழ்வான் என்று குறைந்த நிலைமையில் ஸ்ரீவைஷ்ணவர்கள் வைத்திருக்கிறார்கள். எமது மத்வமதத்தின்படி பகவானுடைய அவதாரங்களிலும் ரூபத்திலும் கிரியையிலும் குணத்திலும் ஆயுதங்களிலும் அவயவங்களிலும் பேதமே இல்லை. எல்லாம் பகவானே என்பது எமது சித்தாந்தம். அதன்படித்தான் ஸ்ரீசக்ராயுதம் இந்நகரில் சக்ரபாணி என்றே உபாஸிக்கப்படுகிறது. சாரங்கபாணியையும் சக்ரபாணியையும் ஏகாஸனத்தில் வைத்து அர்ச்சிக்கப்படும்படி க்ஷேத்திர மகாத்மியத்தில் விதிக்கப்பட்டு அவ்வாறே அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. பகவானாகிய ஸ்ரீவேதவியாஸர் இவ்வாறு மத்வமதத்தை எல்லோரும் பின்பற்றும்படியாய் இந்நகர் மகாத்மியத்தில் கண்டு அறிவித்திருக்கிறார். ஆதலால் மாத்வர்களின் மகான்களான ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகள் மங்களாம்பிகையை சேவித்து 104 கிரந்தங்களை இயற்றி சைவ சமயத்தைக் கண்டித்தார். அத்வைத மதத்தைக் கண்டித்து அப்பைய்ய தீக்ஷிதரை நிக்ரஹித்து துவைத மதத்தை ஸ்தாபித்தார். ஸ்ரீமத்மத வர்த்தன: என்று மத்வ மதத்தை தமது கிரந்தங்களால் பிரகாசிக்கும்படி செய்த ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமிகளும் இந்நகரில் தான் தன் மரணம் வரையில் இருந்து அநேகமாய் எல்லா கிரந்தங்களை இவ்வூரில் இயற்றியது. மத்வமதத்திற்கு விருத்திகரமாயுள்ள இந்நகரின் ப்ரபாவத்தால் தான் உத்திராதி மடம் ஸ்வாமிகளான ஸ்ரீஸத்யத்யான தீர்த்தருக்கும் அத்வைதிகளுக்கும் வைகுப்ரபலமாய் 21 நாட்கள் விவாதம் நடந்து அத்வைதிகள் பராஜிதர்களாய் எழுந்தோடும்படி நேரிட்டது. பிரபலமான மாத்வ பத்திரிகையான மாத்வமித்திரனும் இவ்வூரின் ப்ரபாவத்தால்தான் நிர்விக்னமாய் பிரசுரமாகி வருகிறது. பிரசித்திபெற்ற அநேக மாத்வ பண்டிதர்கள் இவ்வூரில் இருந்திருக்கிறார்கள். புத்திக்கு நிவாஸ பூமியான இந்நகரில் ப்ராகிருதவித்தைகளிலும் மகா நிபுணர்கள் இருந்திருக்கிறார்கள். தேசதந்திரிகளாய் மகா ப்ரக்யாதர்களான திவான்பஹதூர் ரகுநாதராயர், மாதவராயர், சேஷய்யா சாஸ்திரிகள், கணக்கில் அமானுஷபத்தியுள்ள ராமானுஜ அய்யங்கார், பிரபல தேசவாதிகளான V. S. ஸ்ரீனிவாச சாஸ்திரி A. ரெங்கசாமி அய்யங்கார் கஸ்தூரி ரங்க அய்யங்கார் போன்ற அநேகர் இந்நகரைச் சேர்ந்ததர்களாவார்கள். இத்துடன் மகா தர்மிஷ்டர்கள் இருந்ததால் தான் ரெட்டிராயர் அக்ரஹாரம் வெங்கட்டராவ் அக்ரகாரம் வியாஸராவ் அக்கிரகாரம் நாராயணராவ் அக்ரகாரம் பச்சையப்பமுதலி அக்ரஹாரம் சோலையப்பமுதலி அக்ரகாரம் முதலியவை ஏற்பட்டது. ஆகவே இந்நகர் படிப்பினாலும் தர்மத்தாலும் புராண சரித்திரத்தாலும் பரிசுத்தத்தன்மையாலும் ஜனத்தொகையாலும் அதிஉத்தமமாயுள்ளது. இந்த க்ஷேத்திரத்தின் அமைப்பு முதலியவைகளை விமரிசை செய்து மத்வமதக்கொள்கையின்படி பகவத்உபாஸனைசெய்து அவரவர்களின் ஆத்ம ஸுகானுபவமாகிய மோக்ஷத்தை அடைய வேண்டியதவசியம்.

செய்தித் திரட்டு.

மதுரை பிரம்ம வித்யாச்ரம சபையின் ஆதரவில் 19—10—35ல் ஸ்ரீமான் ஜே. வி. ரங்காசாரியாரால் ஆஸ்திக வைதிக மதத்தைப்பற்றியும், 2—11—35ல் ஸ்ரீமான் ரமண. கிருஷ்ணாசாரியாரால் கீதா தத்வத்திலுள்ள பூர்ணஞானத்தவாதி பகவத்குணங்களைப்பற்றியும், 16-11-35ல் ஸ்ரீமான் ந. சங்கர்லால் அவர்களால் ஆஸ்திக மத லக்ஷணமும் நாஸ்திக மத லக்ஷணமும் என்பதைப்பற்றியும், 30—11—35ல் ஸ்ரீமான் ரமண. கிருஷ்ணாசாரியாரால் ஸ்ரீமத்வாசாரியாரின் பிரமாண லக்ஷணத்தைப் பற்றியும் உபன்யாஸங்கள் நடந்ததென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீரங்கம் ஸ்ரீமான் மத்வஸித்தாந்த சபையின் ஆதரவின்கீழ் வழக்கப்படி ஆகஸ்டுமீ 1ட முதல் அக்டோபர்மீ 6ட வரையில் ஸ்ரீமான் யஜ்ஞநாதாசாரியார் அவர்களால் ஸ்ரீமத்வ விஜயத்தில் 4, 5, 6 ஸர்க்கங்களின் உபன்யாஸமும் சத்திய விஜயநகரம் ஸ்ரீமான் வெங்கோபாசாரியாரால் வைஷ்ணவ தீக்ஷை என்பதைப்பற்றியும், ஸ்ரீமான் ராகவேந்திராசாரியாரவர்களால் இச்சபையின் மெம்பர்களாகிய ஸ்ரீமான்களான மெயில் ஸார்ட்டர் ராமராயருடையவும், பாளையம் சப்புராயருடையவும் கிருஹங்களில் சுமார் 2 மாதகாலமாய் முறையே சொல்லிவந்த ஹரிவம்ச புராணத்திலும் ஸ்ரீமத் பாகவத புராணத்திலும் பிராம்மண சந்தர்ப்பணையுடன் மங்களோற்சவம் நடத்தப்பட்டதென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இக்நகர் செட்டிராயர் அக்கிரகாரத்திலிருந்துவரும் புதுக்கோட்டை காலேஜ் ரிடையர்ட் இங்கிலீஷ் புரொபஸர் ஸ்ரீமான் N. ஸஞ்சீவி ராவ் M.A., L.T., அவர்களின் பெருமுயற்சியால் ஷெயாருடைய கிருகத்தில், சுமார் 1½ மாதகாலமாய் பிரதிதினம் இரவு 8-மணிக்கு இம்மாத்வமித்திரன் பத்திராதிபர் ஸ்ரீமதே பாகவதம் ரங்கநாதாசாரியாரால் தமிழில் சொல்லப்பட்டுவரும் ஸ்ரீ ஹரிவம்ச புராணத்தில், இரண்டாவது பர்வமாகிய விஷ்ணு பர்வத்தில் நாளது 20—12—35 சுக்ரவாரத்தன்று ஸ்ரீ ருக்மணி கல்யாண மஹோற்சவத்தை நடத்த நிச்சயித்திருப்பதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

விசேஷ தினங்கள்.

புஷ்ய மாஸம்.

28	12	35	சனிவாரம்	ச்ரவணம் உப. விஷ்ணுப. உப.
31	12	35	மங்களவாரம்	தனுர்வ்யதீபாதம்.
4	1	36	சனிவாரம்	ஸ்ரீரகூத்தம ஸ்வாமிகளின் புண்யதினம். தசமி ஹரிவாஸரம் இரவுமணி 8-52க்குள் போஜனம்.
5	1	36	பானுவாரம்	ஏகாதசி உப.
6	1	36	சோமவாரம்	முக்கோடி த்வாதசி.
8	1	36	புதவாரம்	பௌர்ணமி சந்திர கிரஹணம் இரவு ஸ்பரிசம் மணி 10-4; மணி 1-14க்குமோக்ஷம் பகல் மணி 12-22க்குள் போஜனம். புனர்வஸு நக்ஷத்திரம், மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு சாந்தி.
14	1	36	மங்களவாரம்	உத்தராயண புண்யகாலம் மணி 1-53க்கு மேல். தனுர்மாஸ பூஜாபூர்த்தி.
20	1	36	சோமவாரம்	ஏகாதசி உப.
23	1	36	குருவாரம்	தர்சம்.
24	1	36	சுக்ரவாரம்	விஷ்ணுப. உப. புரந்தரதாஸர் புண்யதினம்.

208734

மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாஸமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும். எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும். பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும். பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும் ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,
ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

மாத்வமித்திரன் பழைய வாலியங்கள் வெகு சொற்பம் தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.

டி. எஸ். ஆர்.

அண்டு

கம்பெனி

கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 | தந்திவிலாஸம் "கோகுல்"

எங்கள் வாஸனாதிரவியசாலையில்
தயாரித்து விற்பனைக்கு தயாராக
இருக்கும் ஸாமான்களின் விபரம்.

வாஸனைப்பாக்கு	பலகாய்கரி ஊர்காய்கள்
வாஸனைச்சுண்ணாம்பு	ரோஜாப்பூ குல்கந்து
வாஸனைப் புகையிலை	ஷர்பத் தினுசுகள்
ஸ்நானப்பவுடர்	கொப்பரைச்சீவல்
கேஸர் பவுடர்	கோகுல் கூந்தல்
அம்பர், அரகஜா	பற்பொடி [தைலம்
தசாங்கம்	ஊதுவத்திகள்

சந்தனாதித் தைலம்,
அரைக்கீரைவிதைத் தைலம்,
மற்றும் அநேகவாஸனை சாமான்களும் கிடைக்கும்.
கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

Printed at Sri Venkateswar Power Printing Works and Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam.